# சர்வதேசப் பார்வை


சர்வதேச விவகாரங்களுக்கான
இஸ்லாமிய இதழ் - 24





# தோற்றுப் போகும் இராணுவ ஆட்சி

வெளிவந்துவிட்டது...

# Magazine...! Online Version






## எமது வெளியீடுகளான...

- வைகறை
- சர்வதேசப்பார்வை

**சஞ்சிகைகளை**

**இணையத்தில் பார்வையிட...**

www.meelparvai.net






MMC

**சர்வதேசப் பார்வை**

சர்வதேச விவகாரங்களுக்கான இஸ்லாமிய இதழ்

செப்டம்பர் - நவம்பர் 2013 - இதழ் 24





தனிப் பிரதி 60.00


**பிரதம ஆசிரியர்:**

றவூப் ஸெய்ன்

**ஆசிரியர்:**

ஏ.டபிள்யு.எம். பாஸிர்

**ஆசிரியர் குழு:**

சிராஜ் மஷ்ஹூர்
மிஹ்ழார் எம். ரஷீத்
ஹனான் ஹுஸைன்
எம்.என். முஹம்மத்

**தளக்கோலம், அட்டை வடிவமைப்பு:**

அஸார் வஸீர்

**தட்டச்சு:**

அஷ்கர் தஸ்லீம்

சந்தா விபரம்:

ஒரு வருட சந்தா - 300/=

தனி இதழ்: 60/=



**MMC - Meelparvai Media Centre,** No. 49, Sri Mahinda Dharma Mawatha (Perth Road) Colombo-09.

Tel : 077 2227569 Email : meelparvai@gmail.com, www.meelparvai.net



# உள்ளடக்கம்

ஆட்சிக் கவிழ்ப்பால் இலாபமடைவது இஸ்ரேலே 07

எகிப்தின் இராணுவச் சதி: சூழ்ச்சியின் பன்முகங்கள் 10

இஸ்லாமிய ஆட்சியைக் கவிழ்த்த உள்ளூர் முகவர்கள் யார்? 14

முர்ஸிக்கு எதிரான ஆர்ப்பாட்டத்தில் களமிறக்கப்பட்டவர்கள் 16

அதிகாரம் இரத்தத்தை விடவும் சுவையானது... 17

எகிப்து அரசியல் வரலாறு குறித்த சுருக்க அறிமுகம் 19

முர்ஸியின் வீழ்ச்சியால் இழந்தது என்ன? 28


எகிப்து இராணுவப் புரட்சியும் பலஸ்தீன விவகாரமும் 31

தடைகளைத் தாண்டும் தூனீஸியா 34

தூனிசியாவின் ஜனநாயக நிலைமாற்றம் முழுப் பிராந்தியத்துக்கும் முக்கியமானது: 38

2013 பலஸ்தீன்-இஸ்ரேலியப் பேச்சுவார்த்தைகள் 40

சிரியாவின் நெருக்கடிக்கு ரஷ்யாவின் மாற்றுத் தீர்வு 43



# Editorial

## ஆசிரியர் தலையங்கம்

புகழனைத்தும் அல்லாஹ்வுக்கே. இறுதி இறைத்தூதர் (ஸல்) அவர்கள் மீது சாந்தியும் சமாதானமும் உண்டாவதாக.

இஸ்லாமிய உலகம் மீண்டும் மிகுந்த நெருக்கடியான காலமொன்றுக்குள் காலடி எடுத்து வைக்கின்றது. பல்வேறு சோதனைகள் அதனைச் சூழ்ந்துள்ளன. எகிப்தில் இஸ்லாமிய ஆட்சி கவிழ்க்கப்பட்ட பின்னர், தூனிஸியா, சிரியா, பலஸ்தீன் என்பவற்றிலும் மதச்சார்பற்ற சக்திகள் நெருக்குவாரங்களை உருவாக்கி வருகின்றன.

சிரியா இன்றைய உலக பேசுபொருளாக மாறியுள்ளது. இரசாயன குண்டுத் தாக்குதல், அமெரிக்க எதிர்வினை, ரஷ்ய சமரசம் என்றவாறு செய்திகள் கட்டமைக்கப்படுகின்றன.

எகிப்திலும் சிரியாவிலும் நடைபெறுவன குறித்து எதிரும் புதிருமான செய்திகளும் அறிக்கைகளும் வெளிவந்த வண்ணமுள்ளன. ஊடகங்களின், அவை சார்ந்துள்ள நிறுவனங்களின், அவை விசுவாசிக்கும் அரசுகளின் பொய் முகங்களைத் தோலுரித்து, அறபுலகின் -குறிப்பாக எகிப்தின் களநிலவரங்களை விரிவாகப் பேசும் வகையில் சர்வதேசப் பார்வை சிறப்பிதழ் வெளிவருகின்றது.

இராணுவ சதிப் புரட்சியைத் திட்டமிட்டவர்கள், வழிநடத்தியவர்கள், ஆதரவளித்த வஞ்சகர்கள், இராணுவ ஆட்சியில் தினரும் எகிப்து இன்று எதிர்நோக்கியுள்ள நெருக்கடிகள் பற்றி இவ்விதழ் விரிவாகப் பேசுகின்றது.

அதற்கப்பால், தூனிஸியா, பலஸ்தீன், சிரியா என்பவற்றில் இஸ்லாமிய ஆட்சிக் கவிழ்ப்பு உருவாக்கியுள்ள எதிரொலிகள் குறித்தும் இவ்விதழ் ஆராய்கின்றது.

தொடர்ச்சியாக எழுதி வருகின்ற பத்தியாளர்களும் வாசகர்களுமே எமது பலமாகும். அவர்களின் ஒத்துழைப்பையும் ஆதரவையும் தொடர்ந்தும் எதிர்பார்க்கின்றோம். இஸ்லாமிய உலகின் விடிவுக்காகப் பிரார்த்திக்குமாறு அனைத்து சகோதரர்களையும் வேண்டி நிற்கிறோம்.

பிரதம ஆசிரியர்

# எகிப்தில் அமைதிவழிப் போராட்டம் தொடரும்

## சகோதரத்துவ அமைப்பின் ஊடக அறிக்கை



இராணுவ கொடுங்கோன்மைக்கு எதிரான அமைதிவழிப் போராட்டம் தொடரும் என எகிப்தின் சகோதரத்துவ அமைப்பு விடுத்துள்ள அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. கடந்த வாரம் அவ்வமைப்பு வெளியிட்டுள்ள அறிக்கையில், எகிப்தில் இராணுவத்தினர் மேற்கொண்ட படுகொலை அவர்களுக்கு உலகத்திலும் மறுமையிலும் இழிவைப் பெற்றுக் கொடுக்கும் எனவும், இறை தண்டனை நிச்சயம் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இவ்வறிக்கையில், ஜூலை 03 இல் கலாநிதி முர்ஸி பதவி கவிழ்க்கப்பட்டதை அடுத்து நடந்த வன்முறைகள் அனைத்தையும் பட்டியலிட்டுள்ளன. அதில் றாபியா அல் அதவிய்யா, நஹ்ழா ஆகிய சதுக்கங்களில் மேற்கொள்ளப்பட்ட படுகொலை, மாற்று ஊடகங்கள் மீதான அடக்குமுறை, கண்மூடித்தனமான கைது நடவடிக்கை என மனித உரிமை மீறல்கள் பதிவுசெய்யப்பட்டுள்ளன.

சுதந்திரம், கண்ணியம், இறைமை, நீதி, சீர்திருத்தம், அபிவிருத்தி ஆகிய இலக்குகளை அடையும்வரை ஷுஹதாக்களின் பாதையில் அமைதிவழிப் போராட்டம் தொடரும் எனவும் சகோதரத்துவ இயக்கத்தின் அறிக்கை சுட்டிக் காட்டியுள்ளது. இதற்காகவே இன்று எகிப்திய மக்கள் போராடி வருகின்றனர். ஜனநாயக, அரசியல் அமைப்பு ரீதியான மிதவாத அரசாங்கம் இதற்கு அவசியம். மாறாக, இராணுவக் கொடுங்கோன்மை அல்ல என அவ்வறிக்கை மேலும் சுட்டிக்காட்டியுள்ளது.

எகிப்தின் லிபரல்வாதிகளும் இராணுவ அதிகாரிகளும் சதிப் புரட்சியில் ஈடுபட்ட தலைவர்களால் ஏமாற்றப்பட்டுள்ளனர். நீங்கள் இன்று சகோதரத்துவ இயக்கத்திற்கு எதிராகப் போராடவில்லை. மாறாக, எகிப்திய மக்களுக்கு எதிராகவே போராடுகிறீர்கள் எனவும் அவ்வறிக்கை தெரிவிக்கின்றது.

எகிப்திய மக்களோடும் எகிப்தோடும் மோதுவதால் நீங்கள் அடையும் இலாபம் என்ன? எகிப்தும் எகிப்திய மக்களுமே உங்களுக்கு ஊதியம் வழங்குகின்றன. அவர்களின் பணத்திலிருந்தே நீங்கள் ஆயுதம் வாங்குகிறீர்கள். அப்படியிருக்கையில் தேசத்திற்கும் மக்களுக்கும் விசுவாசமாக இருப்பதை விடுத்து, மக்களை கொன்று குவிப்பதற்கு உங்கள் ஆயுதங்களை எப்படித் திருப்புகிறீர்கள்?

எகிப்தின் பொலிஸாரையும் படைவீரர்களையும் மேலதிகாரிகளின் கட்டளைகளுக்கு அடிபணிய வேண்டாம் எனக் கோரியுள்ள சகோதரத்துவ இயக்கம், வெளிநாட்டு சக்திகளின் நலன்களுக்காகவும் சுயலாபங்களுக்காகவும் செயற்படாமல் எகிப்தின் நலனுக்காகச் செயற்படுங்கள் எனவும் கோரிக்கை விடுத்துள்ளது.

எகிப்திய மக்கள் கண்ணியத்திற்காகவும் சுதந்திரத்திற்காகவும் போராடுகின்றனர். அந்தப் போராட்டத்தில் இணைந்துகொள்ளுங்கள் என எகிப்திய இராணுவ அதிகாரிகளுக்கு இஃவான்களின் அறிக்கை அழைப்பு விடுத்துள்ளது.

# பிலிப்பைன்ஸில் மீண்டும் மோதல்




கடந்த சில ஆண்டுகளுக்கு முன்பாக பிலிப்பைன்ஸ் அரசாங்கத்திற்கும் மோரோ இஸ்லாமிய விடுதலை முன்னணிக்கும் இடையில் நடைபெற்ற சமாதானப் பேச்சுவார்த்தைகள் முறிவடைந்துள்ளதால் மீண்டும் மோதல்கள் வெடித்துள்ளன. மோரோ பிராந்தியத்தை தளமாகக் கொண்டு செயல்படும் விடுதலை முன்னணி பணயக் கைதிகளாக வைத்துள்ளோரை மீட்கும் பணியில் அரச படையினர் ஈடுபட்டுள்ளதாக அரசாங்கம் தெரிவித்துள்ளது.

இக்குற்றச்சாட்டை மறுத்துள்ள விடுதலை முன்னணி, மீண்டும் முஸ்லிம்களைப் பெரும்பான்மையாகக் கொண்டுள்ள மோரோ பிராந்தியத்தினை முற்றுகையிட்டு கட்டுப்படுத்தும் வண்ணம் அங்கு அரச படை குவிக்கப்பட்டு வருவதாகக் குற்றம் சுமத்தியுள்ளது.

அரச படையினரின் யுத்த தாங்கிகள் மோரோ பிராந்தியத்தில் குவிக்கப்படுவதனால் அச்சமடைந்துள்ள ஆயிரக்கணக்கான குடும்பங்கள் அங்கிருந்து வெளியேறி வருகின்றனர்.

கிறிஸ்தவ பெரும்பான்மை நாடான பிலிப்பைன்ஸில், கடந்த 30 ஆண்டுகளாக முஸ்லிம்களைப் பெரும்பான்மையாகக் கொண்ட மோரோ பிராந்தியத்திற்கு சுயநிர்ணய உரிமை கோரி மோரோ இஸ்லாமிய விடுதலை முன்னணி போராடி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# சிரிய விவகாரத்தில் ரஷ்யா-அமெரிக்கா உடன்பாடு



சிரியா மீதான இராணுவ நடவடிக்கையை தடுக்க வேண்டுமாயின், சிரிய அரசாங்கம் தன்னிடமுள்ள இரசாயன ஆயுதங்கள் பற்றிய முழு அறிக்கையை மேற்கு நாடுகளிடம் ஒப்படைக்க வேண்டும் என ரஷ்யாவும் அமெரிக்காவும் இணைந்து வலியுறுத்தியுள்ளன.

சுவீஸ் நகர் ஜெனீவாவில் இவ்விரு நாடுகளினதும் வெளிநாட்டமைச்சர்களுக்கிடையில் நடைபெற்ற பேச்சுவார்த்தையினை அடுத்து இவ்வுடன்பாடு எட்டப்பட்டுள்ளது.

சிரிய அரசாங்கம் இரசாயன ஆயுத கையிருப்பு குறித்து அறிக்கை சமர்ப்பிக்காதபட்சத்தில் ஐ.நா. பாதுகாப்புச் சபையூடாக அதற்கெதிரான தீர்மானம் கொண்டு வரப்படும் எனவும் இவ்விரு நாடுகளும் வலியுறுத்தியுள்ளன. சிரிய அரசாங்கம் ஒப்படைக்கும் அறிக்கையின் பிரகாரம் 2014 நடுப்பகுதிக்குள் அங்குள்ள இரசாயன ஆயுதங்கள் சர்வதேச கண்காணிப்பின் கீழ் கொண்டு வரப்படும் அல்லது முற்றாக அழிக்கப்படும் என அமெரிக்க ராஜாங்க செயலாளர் ஜோன் கெரி கருத்து வெளியிட்டுள்ளார்.

பிராந்தியத்தில் சர்வதிகாரம் நிலவும் சிரியாவில் கையிருப்பிலுள்ள இரசாயன ஆயுதங்கள் இஸ்ரேலின் ஆக்கிரமிப்புத் திட்டங்களுக்கு எதிராகப் பயன்படுத்தப்படலாம் எனும் அச்சத்தின் விளைவாகவே அதன் இரசாயன ஆயுதங்கள் மீதான கவனம் குவிந்துள்ளது. இதனால், சிரியாவின் மையப் பிரச்சினையிலிருந்து உலக நாடுகளின் கவனம் திசைதிருப்பப்பட்டுள்ளது.

# ஈராக்கின் அரசியல் ஸ்திரப்பாடு குலைக்கப்படுகின்றது



ஈராக்கில் தொடராக இடம்பெற்று வரும் குண்டுத் தாக்குதல்களும் படுகொலைகளும் நாட்டின் ஸ்திரப்பாட்டை முற்றிலும் கேள்விக் குள்ளாக்கியுள்ளது. அமெரிக்கப் படையினரால் உருவாக்கப்பட்ட பிளவுகளும் பிரிவினைகளும் தற்போது அரசியல் களத்தில் எதிரொலித்து வருவ தாகக் கவலை வெளியிடப்படுகின்றது.

ஈராக்கின் பல்வேறு நகரங்களில் நடைபெற்று வரும் ஷீஆ-சுன்னி மோதல்கள் திட்டமிட்டு மேற்கொள்ளப்படுகின்றன என அந்நாட்டின் அரசியல் அவதானிகள் கருத்து வெளியிட்டுள்ள னர். ஈராக்கில் ஆட்சியில் உள்ள நூரி மாலிகியின் அரசாங்கத்திற்கு ஈரான் மற்றும் சிரிய அரசாங் கங்கள் ஆதரவளித்து வருகின்றன.

சுன்னி முஸ்லிம்களின் அடிப்படை அரசியல் உரிமைகள் மறுக்கப்பட்டுவருவதனால் இரு சமூகங்களுக்கும் இடையில்ஆழமான பிளவு களும் கசப்புணர்வுகளும் வளர்க்கப்பட்டுள்ளன. பெருமளவு பெற்றோலிய வளத்தைக் கொண் டுள்ள ஈராக்கை குழு மோதல்களூடாகப் பிளவு படுத்துவது மேற்கு நாடுகளுக்கு மிகவும் பய னுள்ளது என்றவகையில், ஈராக்கின் உள்ளக நிலைமைகளை நோக்க வேண்டும் என சுன்னி சமூக அரசியலமைப்பு நிபுணர் ரியாத் அத்னான் சுட்டிக்காட்டியுள்ளார்.

2003 இல் ஈராக் ஆக்கிரமிக்கப்பட்டு, கடந்த 10 ஆண்டு இடைவெளியில் 15 இலட்சம் மக்கள் கொல்லப்பட்டுள்ளனர். எனினும், இந்தக் கொலைகளும் வன்முறைகளும் இன்னும் தொடர்வதே ஆச்சமளிக்கின்றது. நாளாந்தம் 105 பேர் சராசரியாக ஈராக்கில் கொல்லப்பட்டு வருவ தாக மற்றொரு ஆய்வு கூறுகின்றது.

# காஸாவில் மீண்டும் எரிபொருள் நெருக்கடி





எகிப்து-காஸாவின் றபா எல்லை இராணுவப் புரட்சியை அடுத்து உடனடியாக மூடப்பட்டுள்ள தால் காஸாவில் கடும் எரிபொருள் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. இதனால், காஸா மீனவர்கள் மீன் பிடியில் ஈடுபடுவது முதல் காஸாசிறுவர்களின் கல்வி நடவடிக்கைகளும் பாதிக்கப்பட்டுள்ளன.

எரிபொருள் தட்டுப்பாட்டினால் காஸாவில் இயங்கும் சிறிய ரக மின் பிறப்பாக்கிகளும் செய லிழக்கும் நிலைக்கு வந்துள்ளன. மீண்டும் காஸா இஸ்ரேலினாலும் எகிப்தினாலும் முற்றுகையிடப் பட்டுள்ளது.

காஸாவின் பெற்றோலிய நிரப்பு நிலையங்கள் தமது பணி நேரங்களைச் சுருக்கியுள்ளது. மின்சாரமும் குறிப்பிட்ட மணித்தியாலங்களுக்கே தடையின்றிக் கிடைக்கின்றது. ஒரு நாளைக்கு 8 மணித்தியாலங்களே காஸாவுக்கு மின்சார வசதி கிடைப்பதனால் மக்கள் மெழுகுதிரிகளையும் விளக்குகளையுமே இரவு நேரங்களில் அதிகம் பயன்படுத்துகின்றனர். இஸ்ரேலிடமிருந்து கிடைக்கும் மின்சாரம் முற்றாகத் துண்டிக்கப் பட்டுள்ளது.

ஆக்கிரமிக்கும் இஸ்ரேலின் முற்றுகையின் கீழ் காஸா தொடர்ந்தும் மனிதாபிமான நெருக்கடி களை எதிர்கொண்டு வருகின்றது. சர்வதேச சமூ கமோ காஸா மக்களை முற்றாக கைவிட்டுள்ள தாகக் கவலை வெளியிடப்படுகின்றது.

# ஆட்சிக் கவிழ்ப்பால் இலாபமடைவது இஸ்ரேலே



லதீப் பாரூக்

**கொல், அழி, ஈவிரக்கமின்றிப் படுகொலை செய். என்ன விலை கொடுத்தாவது முஸ்லிம் சகோதரத்துவ அமைப்பை கருவறுத்துவிடு. எகிப்திய இராணுவத் தளபதி அப்துல் பத்தாஹ் அல்-ஸீஸிக்கு வழங்கப்பட்டுள்ள தெளிவான அறிவுறுத்தல் இதுதான்.**



ஸியோனிஸ, அமெரிக்க, ஐரோப்பிய எஜமானர்களினதும், இராணுவப் புரட்சிக்கு நிதியுதவி வழங்கிய சவூதி, ஐக்கிய அரபு இராச்சியம், குவைத் போன்ற நாடுகளின் பாசிச முல்லாக்களினதும் மோசமான சாத்தானிய நிகழ்ச்சி நிரலை முன்கொண்டு செல்லும் வகையில், அல்-ஸிஸி இவ்வுத்தரவுகளை சிரமேற்கொண்டு நிறைவேற்றி வருகிறார் என்பதையே தற்போதைய எகிப்திய நிகழ்வுகள் பறைசாற்றுகின்றன.

ஏழாயிரம் ஆண்டுகளுக்கும் அதிகமான பதிவு செய்யப்பட்ட வரலாற்றையும், மத்திய கிழக்கில் மிக அதிக சனத்தொகையையும் கொண்ட எகிப்தை அவர் ஒரு கொலைக் களமாகவே மாற்றி வருகின்றார்.

புகழ் பெற்ற அரபு வசந்தத்தின் மூலம் பதவி கவிழ்க்கப்பட்ட ஹுஸ்னி முபாரக்கை மேற் கின் பணிவுள்ள நாய் என கண் பார்வையில்லாத எகிப்திய மார்க்க அறிஞர் ஷெய்க் அப்துல் ரஹ்மான் வர்ணித்திருந்தார். அப்படிப்பட்ட முபாரக் கூட தற்போது அல்-ஸீஸி இழைத்து வருகின்ற கொடுமைகளைப் புரிவதற்குத் துணியவில்லை.

அறுபது ஆண்டுகள் கழித்து, நீதியும், நேர்மையானது மானதொரு தேர்தலின் மூலமாக தெரிவான அதிபர் முர்ஸி, அல்-ஸீஸியை நம்பி, அவரை இரா ணுவத் தளபதியாகவும், பாதுகாப்பமைச்சராகவும் நியமித்தார். ஆனால், நாட்டிற்கும், ஜனாதிபதிக்கும் விசுவாசமாக இருப்பதை விட, ஸியோனிஸ எஜமானர்களுக்கு விசுவாசமாக இருப்பதே அல்-ஸீஸிக்குப் பிரதான முன்னுரிமையாக இருந்தது.

முர்ஸியின் அரசாங்கத்தை மாத்திரம் அவர் கவிழ்க்கவில்லை. ஜனநாயகத்திற்கு எகிப்து மீளச் செல்ல வேண்டும் எனக் கோரும் பொது மக்களையும் தனது மனச்சாட்சியை அடகு வைத்து விட்டு அவர் கொன்று குவித்து வருகிறார்.

பயங்கரவாதத்தை எதிர்க்கின்ற போர்வையில், அமெரிக்காவையும், ஐரோப்பாவையும் கட்டுப் படுத்துகின்ற யூதர்கள், இஸ்லாத்தையும், முஸ் லிம்களையும் பெரும் அழிவுகரமானதொரு சக்தியாக தவறாகச் சித்தரித்து, முஸ்லிம் நாடு களை அழித்தொழிக்கின்ற கைங்கரியங்களில் ஈடுபட்டு வருகிறார்கள் என்பது ஒரு பொதுவான உண்மை. கடந்த பதினான்கு நூற்றாண்டுகளில் முஸ்லிம் சமூகத்திற்கு எதிராகத் தொடுக்கப்பட்ட மிக மோசமான தாக்குதல் இதுவாகத்தான் இருக்க வேண்டும்.



எகிப்திய நெருக்கடியின் பின்னணியிலும் புதைந்திருக்க மிகத் தெளிவான நோக்கம், சகல சர்வதேச சட்டங்கள், ஒழுங்குகளுக்கும் முரணாக கொள்ளையிடப்பட்ட பலஸ்தீனிய நிலத்தில் நிறுவப்பட்டுள்ள பாஸிச இஸ்ரேலிய அரசாங்கத் தின் பாதுகாப்பை உறுதி செய்வதும், பிராந்திய சக்தியாக அதன் வல்லமையைத் தொடர்ந்து தக்க வைத்துக் கொள்வதும், தொடர்ந்தும் மேற்குலகு பிராந்தியத்தை சுரண்டுவதற்கு அனுமதியை வழங்குவதும்தான்.

இதனை சாதிப்பதாக இருப்பின் மத்திய கிழக் கில் உறுதியற்ற நிலையைத் தோற்றுவிக்க வேண் டும். எகிப்தில் இஸ்லாமிய ஜனநாயகம் தளைத் தோங்குவது, பிராந்தியத்தில் தமது சாத்தானிய இலக்குகளுக்கு அடிக்கின்ற சாவு மணியாகும் என்பதை மேற்கு நன்கு அறிந்திருக்கிறது. அத்தோடு இஸ்ரேல், அமெரிக்க, ஐரோப்பியப் பாதுகாப்போடு எண்ணெய் வளம் நிரம்பிய வளைகுடா நாடுகளின் ஆட்சிப் பீடங்களில் வீற்றிருக்கின்ற மன்னர்களின் இருப்பிற்கும் அது அத்துணை சாதகமான அம்சமல்ல.

இப்பூகோள திட்டத்தின் கீழ் அவர்கள் ஈராக், லிபியா, ஆப்கானிஸ்தான், சிரியா மற்றும் பல முஸ்லிம் நாடுகளை அழித்தொழித்து விட்டார் கள். பொஸ்னியாவில் இருந்து பர்மா வரை முஸ்லிம்களின் இரத்த ஆறு பீறிட்டு ஓடுகின்றது. மில்லியன் கணக்கில் படுகொலை செய்யப்பட் டும், காயமடைந்தும், தமது சொந்த இடங்களில் இருந்து விரட்டப்பட்டும் வறுமை தாண்டவமாடு கின்ற அகதி முகாம்களுக்குள் விரட்டப்பட்டும் இருக்கிறார்கள். உலகளாவிய ரீதியில் முஸ்லிம் களைக் கொலை செய்வது என்பது மேற்குலகத் தலைவர்களுக்கும், அவர்களது மத்திய கிழக்கு அடிவருடிகளுக்கும் ஒரு பொழுதுபோக்கு.

இஸ்ரேலுக்கு பாரிய அச்சுறுத்தலைப் பிராந்தி யத்தில் வழங்கி வந்த ஒரே நாடு எகிப்துதான். ஆகவே, எகிப்தில் ஜனநாயகம் நிலைநாட்டப் பட்டு விட்டதால், அது அழித்தொழிக்கப்பட வேண்டும். அதுவும் எகிப்தில் இஸ்லாமிய ஜனநாயக சக்திகள் நிலை கொண்டிருந்ததோடு, இஸ்ரேலுக்கு சவால் விடுகின்றதொரு சக்தியாக வும் எகிப்து வளர்ந்து வந்தது.

எனவே, அல்-ஸிஸி என்ற மற்றொரு பணி வுள்ள நாயை, முர்ஸி அரசாங்கத்தைக் கவிழ்க் கின்ற அசிங்கமான வேலைக்காக ஸியோனிஸ்டு கள் தேர்ந்தெடுத்தார்கள். இராணுவ ஆட்சியை நிறுவி, முஸ்லிம் சகோதரத்துவ அமைப்பை சிதைத்தார்கள். இஸ்லாமிய விழுமியங்கள், ஒத்துப் போகின்ற தன்மை, சமாதானம், மற்றும் பொதுப்படையாக சிறந்த ஒழுக்கத்தை வெளிப் படுத்தி வருகின்ற முஸ்லிம் சகோதரத்துவ அமைப் பிற்கு எதிராக, கொடூரமான வன்முறையை அல்-ஸிஸி கட்டவிழ்த்து விட்டார்.

அவனது உயர்ந்தபட்ச குற்றம் முஸ்லிம் சகோ தரத்துவ அமைப்பின் ஆன்மீகத் தலைவர் முஹம் மத் பதீஃ அவர்களை கைது செய்துள்ளமை யாகும். அரச தொலைக்காட்சி இவரை ஒரு பொதுவான குற்றவாளியாக சித்தரித்து வருகிறது. முஹம்மத் பதீஃ அவர்களைக் கைதுசெய்தமை எத்துணை முட்டாள்த்தனமானது என்பதைக் காலம் தீர்மானிக்கும்.

உண்மையில் அல்-ஸிஸி முழு நாட்டுடனும் தான் யுத்தம் செய்கிறார். கூலி கொடுத்து அழை த்து வரப்படுகின்ற ஆர்ப்பாட்டக்காரர்கள், சிறு பான்மை கோப்துக்கள், முபாரக் காலத்தில் எகிப் தின் அரசியல், பொருளாதாரம், மற்றும் சமூக

ஸ்திரத்தன்மை என்பவற்றை அடகு வைத்து வயிறு வளர்த்து வந்தவர்கள் தவிர, முழு நாட்டு டனும் அல்-ஸிஸி தற்போது யுத்தம் புரிகிறார் என்பதே உண்மை.

இராணுவப் புரட்சிக்கு அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகள் காட்டிய துலங்கல் சுதந்திரம், ஜனநாயகம், மனித உரிமைகள் என்று ஒரு சில கபட நாடகங்களை ஆடியதைத் தவிர வேறு எதுவும் இல்லை. அவர்கள் இராணுவத்திடம் இராணுவப் புரட்சியை முடித்துக் கொண்டு, ஜனாதிபதி முர்ஸியைப் பதவியில் அமர்த்துமாறு கோரவே இல்லை. பதிலாக ஐரோப்பாவும் அமெரிக்காவும் முஸ்லிம் சகோதரத்துவ அமைப் பை இராணுவ அரசாங்கத்தை ஏற்றுக் கொள்ளச் செய்யும் வகையில், சகோதரத்துவ அமைப்பிற்கு ஊக்கம் அளிப்பதற்கு முயற்சி செய்தன.

மில்லியன் கணக்கானவர்களின் கொலைக்குப் பின்புலத்தில் இருப்பதன் மூலம் பிழைக்கின்ற ஆயுதக் கம்பனிகளால் உரிமை கொள்ளப் பட்டுள்ள, யூதர்களால் கட்டுப்படுத்தப்படுகின்ற மேற்கு ஊடகங்களும், அல்- ஸிஸியின் இராணுவ நிருவாகத்தை உத்தியோகபூர்வமான அரசாங்கம் போல் தமது அறிக்கைகளில் குறிப்பிட்டு வருவ தோடு, உத்தியோகபூர்வமற்ற அரசாங்கம் என்ப தைக் காட்டுவதற்கும் வெளிப்படுத்துவதற்கும் தவறி வருகின்றன. தாம் விரும்புகின்ற பூலோக ஒழுங்குக்கு சார்பான வேலையை அல்- ஸிஸி மேற்கொள்வதால், இம்மீடியாக்களின் செயற் பாடுகளில், தாம் வழமையாக உச்சரிக்கின்ற ஜனநாயகம் மறைந்து போயிருக்கிறது.

அனைத்துக்கும் மேலாக, எகிப்திய முஸ்லிம் சகோதரத்துவ அமைப்பின் பயங்கரவாதத்திற்கு எதிராக இராணுவம் போராடுவதாகக் (?) கூறி, எகிப்திய இராணுவத்திற்கான தனது பூரண ஆதரவை சவூதி அரேபியா மன்னர் வெளிப் படுத்தி இருக்கிறார்..

இஸ்லாமிய இயக்கத்தைக் கருவறுப்பதற்கு, ஜனநாயகத்தைக் கோரும் மக்களைப் படுகொலை செய்யும் இராணுவ நிர்வாகத்திற்கு சவூதி மன்னர் வழங்குகின்ற தாராளமான உதவி, அவரது இஸ் லாமிய முக மூடியைக் கிழித்து, அவரது உண்மை யான ஸியோனிஸ முகத்தைத் தோலுரித்துக் காட்டியுள்ளது. இஸ்லாமியப் புனிதத் தளங்களின் காவலர்களாகத் தம்மைக் கருதிக் கொள்வதற்கு எந்த விதமான தகுதியும் இல்லாத இவர்களுக்கு எதிராக மக்கள் எதிர்ப்பு வெடித்துக் கிளம்பு வதற்கான காலம் வெகு தூரத்தில் இல்லை.

சவூதி மன்னரின் இவ்விழி செயலை வர்ணிக் கும் மூத்த பிரித்தானிய ஊடகவியலாளர் ரொபர்ட் ஃபிஸ்க், எகிப்திய இராணுவ நிர்வாகத்திற்கான அப்துல்லாஹ்வின் ஆதரவு முஸ்லிம் உலகு வெட்கப்படுகின்ற விடயமாகும் எனத் தெரி வித்துள்ளார்.

இதற்கு முன்பும் சவூதி அரச குடும்பத்தின் செயல்பாடுகள் அனைத்துமே முஸ்லிம் உலகிற்கு வெட்ககரமானதாகவும், தலை குனிவை ஏற்படுத் தக் கூடியதாகவும், அபாயகரமானதாகவுமே இருந்து வந்திருக்கிறது. ரகசியமாகவும், பகிரங்க மாகவும் உலகளாவிய ரீதியான முஸ்லிம் விரோத நடவடிக்கைகளில் அவர்கள் கைகோர்த்திருக்கி றார்கள்.



எவ்வாறாயினும், வளர்ந்து வரும் இஸ்லாத் தைக் கருவறுக்கும் கைங்கரியங்களில் ஈடுபட்டு வரும் இராணுவ நிர்வாகத்திற்குத் தமது நாடு களின் சர்வதிகாரிகள் உதவி புரிந்து வருவதை ஒரே குரலில் வளைகுடா நாடுகளில் வாழ்கின்ற மக்கள் நிராகரித்திருக்கிறார்கள்.

தற்போதைய எகிப்தின் மோசமான நிலை எந்தளவுக்கென்றால், புகழ்பெற்ற அறபு வசந்தம் மூலம் பதவி கவிழ்க்கப்பட்ட ஹுஸ்னி முபாரக் விடுதலையாகி இருக்கிறார். ஜனநாயக ரீதியாகத் தெரிவு செய்யப்பட்ட முர்ஸி சிறையில் வாடு கிறார். இதுதான் எகிப்தின் கவலை தருகின்ற நிலை.


ஒன்றை மட்டும் உறுதியாகச் சொல்லலாம். எகிப்திய இராணுவ நிர்வாகிகளும், அவர்களின் ஆதரவாளர்களும் திறந்து விட்டுள்ள இந்த இரத்த வெள்ளமும், வன்முறையும் அறபு நாடுகளின் சிம்மாசனங்களில் அமர்ந்திருக்கின்ற சர்வதிகார முல்லாக்கள் பதவி கவிழ்க்கப்படும் வரை நிற்கப் போவதில்லை. அநேகமாக இதற்குப் பல ஆண்டுகள் செல்லலாம்.


# எகிப்தின் இராணுவச் சதி


## சூழ்ச்சியின் பன்முகங்கள்

அத்னான் மன்தரிஸ்











அமெரிக்கப் பாதுகாப்புச் செயலாளர் ஷக் ஹெகலுடன் எகிப்தின் இராணுவத் தளபதி சதி ஆலோசனை நடத்திய பின்னர்

**எகிப்தில் கலாநிதி முர்ஸி அவர்களின் ஜனநாயக ஆட்சிக்கு எதிராக திடீரென்று நடந்த இராணுவ சதிப் புரட்சி பலரும் எண்ணு வது போன்று எதேச்சையாக நிகழ்ந்ததல்ல. புவி அரசியல் முக்கியத் துவம் கொண்ட எகிப்தில் இஸ்லாமிய ஆட்சி ஒன்று ஒருபோதும் உருவாகி விடக் கூடாது என பல நூற்றாண்டுகளாக இயங்கி வரும் சக்திகள் திரைமறைவில் தீட்டிய சதித் திட்டமே அரங்கேறியுள்ளது.**

எகிப்தில் இன்று நடப்பதென்ன எனும் கேள்விக்கு சர்வதேச ஊடகங்கள் வழங்கும் விடை பெரும்பாலும் இந்த சதிகார சக்தி களுக்கு ஆதரவாகவே உள்ளது. உள்ளூரில் சர்வதேச ஊடகங்களின் பொறியில் மாட்டியுள்ள ஊடகவியலாளர்களும் இச்சக்திகள் விரும் புபவற்றையே பேசியும் எழுதியும் வந்துள்ளனர். இந்நிலையில் எகிப்தில் நடந்த இராணுவ சதிப் புரட்சியின் பின்னணியைப் புரிந்து கொள்தல் முக்கியமாகின்றது.

கடந்த ஆண்டில் ஜோர்தான் தலைநகர் அம்மானில் அமெரிக்கா, இஸ்ரேல், சவூதி அரேபியா, ஐக்கிய அரபு எமிரேட்ஸ் ஆகிய நாடு களின் பாதுகாப்புத் துறை அதிகாரிகளும் இராஜதந்திரிகளும் ஒன்று

கூடியிருந்தனர். எகிப்தில் ஜனநாயக வழிமுறை ஊடாக ஆட்சிக்கு வந்துள்ள சகோதரத்துவ அமைப்பையும் அதன் தலைமையையும் தொடர்ந்து நீடிக்கச் செய்வதானது தமது நீண்ட கால பிராந்திய அரசியல் பொருளாதார நலன்களுக்கு பாதகமானது என்பதை உணர்ந்துள்ள இவர்கள் ஆட்சியைக் கவிழ்க்கும் சதித்திட்டமொன்றை வரைந்தனர்.

முர்ஸியின் ஆட்சிக்கு எதிராக தஹ்ரீர் சதுக்கத்தில் மில்லியன் பேரை இறக்குவதன் மூலம் அவரது ஆட்சியை பெரும்பாலான எகிப்தியர் நிராகரிக்கின்றனர் எனும் கருத்தை உருவாக்க விரும்பினர். இதற்காக மத்திய கிழக்கை ஜனநாயக மயப்படுத்தல் எனும் பெயரில் அமெரிக்காவின் பல்வேறு நிறுவனங்கள் வழங்கிய வகை தொகையற்ற நிதி பயன்படுத்தப்பட்டுள்ளது. தஹ்ரீர் சதுக்கத்தில் ஒன்று சேர்ந்தவர்களில் அநேகமானோர் அமெரிக்காவின் இந்த டொலர்களுக்கு அடிபணிந்த வெறும் கைக்கூலிகளே.

இன்னொரு புறம் சவூதி அரேபியா, ஐக்கிய அரபு எமிரேட்ஸ் என்பனவும் இதற்கு நிதி ஆதரவு வழங்கின. ஜனநாயக பூர்வமான இஸ்லாமிய ஆட்சி முறை தமது இருப்புக்கு விடுக்கப்படும் பாரிய சவால் என்பதை மத்திய கிழக்கில் தசாப்தங்களாக நீடிக்கும் அதிகாரக் கும்பல்கள் நன்கு உணர்ந்து வைத்துள்ளன. உள்ளூரில் அம்ர் மூஸா, முஹம்மத் பராதீ, அஹ்மத் ஷபீக் உள்ளிட்டு இராணுவத் தளபதி ஸீஸீ போன்றோர் இந்த சதித் திட்டத்தை நடைமுறைப் படுத்துவதில் மும்முரமாக இருந்தனர்.



**முர்ஸி பதவி கவிழ்க்கப்பட்டதைத் தொடர்ந்து ராபிஆ அல்அதவியா, அந்நஹ்ழா, ரம்ஸீஸ் சதுக்கங்களில் திரண்ட மில்லியன் கணக்கான மக்கள் ஜனநாயக தலைவரை மீள நிலைநிறுத்துமாறும் சட்ட ஆட்சியை அமுலுக்குக் கொண்டு வருமாறும் அமைதியாக நடாத்தி வந்த ஆர்ப்பாட்டங்கள் துப்பாக்கிகளால் கலைக்கப்பட்டன.**

அமெரிக்க பாதுகாப்புச் செயலாளர் சக் ஹெகல், ஸீஸியுடன் நடத்திய இரகசிய பேச்சு வார்த்தைகளும் தொடர்ந்து ஜோர்தானில் நடை பெற்ற சதித் திட்ட பேச்சுவார்த்தைகளும் தற்போது அம்பலத்துக்கு வந்துள்ளன.


Pan African News ஆசிரியர் பயோமி அஸ்கிவே ''கடந்த மூன்று தசாப்தங்களாக ஐக்கிய அமெரிக்கா அறபு நாடுகளில் பெருந்தொகை நிதியை செலவு செய்து வந்தது. ஜனநாயக மயமாக்கல் என்ற பெயரில் சர்வாதிகாரிகளையும் குடும்ப அதிகாரக் கும்பல்களையும் நீடிக்கச் செய்வதுதான் அந்த நிதியின் பிரதான நோக்கம். இஸ்ரேலுக்கு அடுத்ததாக ஆகக் கூடிய நிதி பெறும் எகிப்தின் இராணுவம், மத்திய கிழக்கில் அமெரிக்காவின் மிகப்பெரும் ஆயுதமாகும். இவர்கள் இன்று ஜனநாயகத்துக்கு எதிராக பயன்படுத்தப்பட்டுள்ளனர்'' என்கிறார்.

### ஜோர்தானில் தீட்டப்பட்ட சதித் திட்டம் என்ன?

தாம் எதற்காக வாதாடுகின்றோமோ, எதைப் பரப்ப வேண்டும் என்று வாய்வீரம் பேசுகின்றோமோ அந்த ஜனநாயகத்தின் வழியாகவே இஸ்லாமியவாதிகள் அதிகாரத்துக்கு வந்துள்ளனர். இதனால், 2012 இல் முர்ஸி தேர்தலில் வெற்றி பெற்றதை அடுத்து இராணுவம் அவரது வெற்றியை அறிவிக்குமா என்பதில் ஏற்பட்டிருந்த சந்தேகத்தை அமெரிக்கா உடனடியாக அகற்றியது.

ஒரு வருட கால அவகாசத்தையேனும் ஜனநாயகத்துக்கு வழங்க வேண்டும் என்பதுதான் அதன் நிலைப்பாடு. அதற்குப் பின்னர் எகிப்தில் பெரும் அரசியல் குழப்பங்களை உருவாக்கி இஸ்லாமியவாதிகளை பதவி கவிழ்ப்பதுதான் அதன் உள்நோக்கம். இந்நோக்கத்தை நிறைவு செய்ய பல்வேறு படித்தரங்களிலான சதித் திட்டமொன்றை இஸ்ரேல் மற்றும் பிற அறபு நாடுகளோடு இணைந்து அமெரிக்கா மேற்கொண்டது.

முர்ஸியின் ஆட்சிக்கு எதிராக மக்களை திரட்டல், அதற்கென போதிய அளவு நிதியை பயன்படுத்தல், முர்ஸியை இராணுவம் கைதுசெய்து தடுப்புக் காவலில் வைத்தல், முர்ஸி மீளவும் பதவி அமர்த்தப்பட வேண்டும் எனக் கோரும் ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றால் அவற்றை ஆயுத வன்முறையினூடாகக் கலைத்தல், பின்னர் பழைய கொடுங்கோன்மையாளன்




முபாரக்கை விடுதலை செய்தல், மீளவும் இஸ்லாமியவாதிகள் பங்கு பெறாத நாஸரிய யுகத்தை நோக்கி எகிப்தை இழுத்துச் செல்லல் என்பதுதான் இந்த சதித் திட்டத்தின் படிமுறை. இவை ஒவ்வொன்றும் இன்று மிகக் கச்சிதமாக நடைபெற்று வருகின்றது.

முர்ஸி பதவி கவிழ்க்கப்பட்டதைத் தொடர்ந்து ராபிஆ அல்அதவியா, அந்நஹ்ழா, ரம்ஸீஸ் சதுக்கங்களில் திரண்ட மில்லியன் கணக்கான மக்கள் ஜனநாயக தலைவரை மீள நிலைநிறுத்துமாறும் சட்ட ஆட்சியை அமுலுக்குக் கொண்டு வருமாறும் அமைதியாக நடாத்தி வந்த ஆர்ப்பாட்டங்கள் துப்பாக்கிகளால் கலைக்கப்பட்டன. சுமார், 6000 பேர் இதில் கொல்லப்பட்டனர். கொல்லப்பட்டவர்களில் பெண்கள், குழந்தைகள், வயோதிபர்கள் என பலரும் அடங்குகின்றனர். சிலர், இச்சதுக்கங்களில் உயிரோடு தீ மூட்டி எரிக்கப்பட்டுள்ளனர்.

இராணுவத்தின் மூர்க்கத்தனமான தாக்குதல்களை நோக்கும்போது அமைதிப் பேரணியில் கலந்து கொண்ட மக்களை கலைப்பது அவர்களது நோக்கமாக இருக்கவில்லை என்பது தெளிவு. மாறாக, 10 வீதமான மக்களை கொன்று குவிப்பதன் மூலம் ஜனநாயகத்துக்கு ஆதரவான மக்களின் உள்ளங்களில் ஒரு அச்சத்தை இறக்குவதே அவர்களின் நோக்கமாக இருந்தது.

இத்தனை கொடூரங்கள் எகிப்தில் நடைபெற்று வரும்போது சவூதி அறேபிய மன்னர் அப்துல்லாஹ், ஸீஸியின் தலைமையிலான கொலைக் கும்பலுக்கு 5 பில்லியன் அமெரிக்க டொலர்களை உதவியாக வழங்கியுள்ளதோடு மிகப் பகிரங்கமாக இராணுவத்தின் நடவடிக்கையை நியாயப்படுத்தியுள்ளார்.

எகிப்தில் ஸ்திரப்பாட்டை குலைக்கும் எந்த சக்திகளையும் அழிக்கும் இராணுவத்தின் நடவடிக்கைக்கு சவூதியின் அரசாங்கமும் மக்களும் ஆதரவு வழங்குகின்றோம். இராணுவப் புரட்சி என்று இதனை கருதி அமெரிக்க நிதியுதவி நிறுத்தப்பட்டால் அவ்வுதவியை வழங்க நாம் தயாராக உள்ளோம் என்று அப்துல்லாஹ் தெரிவித்துள்ளார்.

*1924 மார்ச் 23* இல் கிலாபத் ஒழிக்கப்பட்டதன் பின்னர், உஸ்மானியர்களால் அப்பிர தேசத்துக்கு நியமிக்கப்பட்டிருந்த ஆளுனர் ஷரீப் ஹுஸைனை எதிர்த்துப் போராடி அப்துல் அஸீஸ் நஜ்தை தன் வயமாக்கிக் கொண்டார். உஸ்மானிய இஸ்லாமிய கிலாபத் தைத் தீர்த்துக் கட்டுவதில் இப்னு ஸஊத் குடும்பம் பிரிட்டனுக்கும் ஸியோனிஸ்டுகளுக்கும் வழங்கிய ஆதரவுக்குப் பகரமாகவே இந்நாடு அக்குடும்பத்துக்கு வழங்கப்பட்டது. இதுதான் சவூதி அரேபியா பிறந்த வரலாறு.

*1947* இல் அப்போதைய ஜனாதிபதி ஹரி எஸ். ட்ரூமனுக்கும் இப்னு ஸஊத் குடும்பத்துக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட இரகசிய ஒப்பந்தத்தின் படி இக்குடும்பத்தின் மன்னராட்சியை பாதுகாக்கும் முழுப் பொறுப்பும் அமெரிக்காவுக்கு வழங்கப்பட்டது. அன்றிலிருந்து இன்று வரை சவூதி அறேபியாவின் அனைத்து ஜனநாயக விரோத நடவடிக்கைகளையும் கேள்விக்குட்படுத்தாத வகையில் ஐ.நா ஊடாக அமெரிக்கா பார்த்துக் கொள்கின்றது. (Latheef Farook, War on Terrorism, the untold truths)

ட்ரூமனுக்கு முன்னர் 1930 களிலிருந்தே அமெரிக்க சவூதி நல்லுறவுக்கான விதைகள் தூவப்பட்டன. 30 களிலேயே அமெரிக்க எண்ணெய்க் கம்பனிகள் சவூதியில் ஆதிக்கம் பெறத் துவங்கியது. 1943 இல் ஜனாதிபதி ரூஸ்வெல்ட்டுக்கும்

சவூதிக்கும் இடையில் இடம்பெற்ற ஒப்பந்தத்தில் யூதர்களுக்கான தாய் நாடு பலஸ்தீனில் உருவாக் கப்படுவதற்கான சம்மதம் தெரிவிக்கப்பட்டது. அறபுத் தலைவர்களின் ஆதரவதைத் திரட்டும் ரூஸ்வெல்ட்டின் நடவடிக்கைகளுக்கு மன்னர் அப்துல் அஸீஸ் தொடக்கத்தில் மறுப்புத் தெரி வித்த போதும் காலப்போக்கில் அத்திட்டத்துக்கு அங்கீகாரம் வழங்கினார். (Latheef Farook)

அமெரிக்காவுக்கும் சவூதிக்கும் உள்ள உறவு கள் பற்றி அநேக ஆய்வுகள் நடந்துள்ளன. 1950 இல் அமெரிக்க ஜனாதிபதி அனுப்பிய உதவி இராஜாங்க செயலாளர் George McGhea அறிமுகப் படுத்திய இராணுவத் திட்டத்தின்போது பின்வரு மாறு குறிப்பிட்டார். சவூதியைப் பாதுகாப்பதற்கு அமெரிக்கா எந்த விலை கொடுக்கவும் தயாராக உள்ளது. இரு நாடுகளையும் ஒரு நாடாகவே நாம் பார்க்கின்றோம். (Latheef Farook)

John F. Kennedy, அவருக்குப் பிந்திய Franklin Roosevelt உள்ளிட்டு ரேகன், புஷ், கிளின்டன் ஆகிய அனைவரோடும் சவூதி அரேபியா சாதக மான வெளிநாட்டுக் கொள்கையையே பின்பற்றி வந்தது. இப்னு ஸஊதின் குடும்ப ஆட்சியை பாதுகாப்பதற்கு செஞ்சோற்றுக் கடனாக பிராந்தி யத்தின் எண்ணெய் வளத்தை குறைந்த விலைக் குத் தாரை வார்ப்பதும் இஸ்ரேலை பாதுகாப்பதும் இக்குடும்பத்தினருக்கு மிகப் பெரும் வரலாற்றுக் கடமையாக ஆக்கப்பட்டது.

இன்னொரு புறம், அரசியல் இஸ்லாத்தை தடுத்து நிறுத்துவதன் மூலம் மூன்று இலக்குகள் அடையப் பெறுகின்றன. அரசியல் இஸ்லாத்தின் ஊடாக ஐக்கியப்படும் முஸ்லிம் பிராந்தியங்க ளின் பொருளாதார மூல வளங்கள் ஒன்று குவிக் கப்படுவதை தவிர்த்தல், சட்ட விரோத அமைப் பாக (Entity) உருவாகியுள்ள இஸ்ரேலை பாது காத்தல். மன்னராட்சியைப் பாதுகாப்பதன் ஊடாக தொடர்ந்தும் எண்ணெய்யின் மீது ஆதிக்கம் செலுத்தல். இந்த இலாபங்களை தக்க வைக்க வேண்டுமாயின் அறபுலகின் எந்தப் பிராந்தியத்தி லிருந்தும் அரசியல் இஸ்லாம் தலைகாட்டுவதை தடுத்து நிறுத்த வேண்டும்.

இஸ்லாமிய அரசொன்று உருவாவதை முளை யிலே கிள்ளி எறிய வேண்டும் என ஏகாதிபத்திய சக்திகள் முனைந்து செயல்படுகின்றன. இந்தத் திட்டத்தில் சவூதி அரேபியா, குவைத், ஐக்கிய அரபு எமிரேட்ஸ் போன்ற அறபு நாடுகளுக்கும் சியோனிஸ இஸ்ரேலுக்கும் யூதர்களின் ஆதிக்கத் தில் உள்ள கிறிஸ்தவ மேற்குலகுக்கும் இடையில் எவ்வித வேறுபாடும் இல்லை.

இப்பின்னணியிலிருந்தே முர்ஸி இராணுவ கும்பலினால் பதவி கவிழ்க்கப்பட்டதை நோக்க வேண்டும். அதேபோன்று அங்கு நடைபெற்ற குரூரமான படுகொலைகளை நியாயப்படுத்தும் வகையிலான மன்னர் அப்துல்லாஹ்வின் வாக்கு மூலங்களையும் பார்க்க வேண்டும்.

பிராந்தியத்தில் சியோனிஸத்துக்கு அகன்ற இஸ்ரேல் கனவு உள்ளது போல, ஷீஆயிஸத்துக்கு அகன்ற ஈரான் கனவு உள்ளது. அதில் எந்த சந்தேக மும் இல்லை. ஆனால், இந்தக் கனவுகளை கச்சித மாகக் கையாளும் அமெரிக்கா இரு பக்கங்களி லிருந்தும் இலாபமடைகின்றது. ஒரு புறம் சவூதி அரேபியாவும் அமெரிக்காவுக்கு மிகுந்த பொரு ளாதார முக்கியத்துவம் கொண்ட நாடாக உள்ளது போல், மறுபுறம் அமெரிக்க ஆளும் வர்க்கத்துக்கு ஈரானும் முக்கியத்துவம் கொண்ட நாடாகும். ஏனெனில், ஈரானியப் பூச்சாண்டியை வைத்தே அமெரிக்கா சவூதி அறேபியாவுக்கு பல பில்லியன் டொலர் பெறுமதியான ஆயுதங்களை விற்று இலாபமடைந்து வருகின்றது.

மேலோட்டமாக இஸ்ரேலை அங்கீகரிக்காத நாடாக சவூதியை அவர்கள் வெளிக்காட்டினா லும், இஸ்ரேலுக்கும் சவூதி அறேபியாவுக்கும் இடையில் ஒரு நல்ல உறவை உருவாக்குவதில் அமெரிக்கா முனைந்து செயற்படுகின்றது. ஈரானுக்கும் அமெரிக்காவுக்கும் இடையிலான உறவு வெளிப்படையில் வெறுப்புக்குரியதாக எப்படிக் காட்டப்படுகின்றதோ அவ்வாறான ஒன்றே இது.

வழிகெட்ட ஷீஆ கொள்கையின் அடிப்படை யிலான ஈரான், இன்று மத்திய கிழக்கில் பல அரசியல் குழப்பங்களின் உறைவிடமாக மாறி யுள்ளது. மத்திய கிழக்கில் கிலாபத் அடிப்படை யிலான ஆட்சி மாற்றம் ஏற்படுவதை மன்னராட்சி நாடுகள் எதிர்ப்பது போன்றே ஈரானும் எதிர்த்து வருகின்றது. இதனால்தான் முர்ஸி பதவி கவிழ்க் கப்பட்டபோது, புதிய ஜனாதிபதி ஹஸன் ரூஹானி முர்ஸி கொண்டிருந்த ஷீஆ ஃபோபியா வின் விளைவுதான் அது என்று அறிக்கை விட்டி ருந்தார். ஷீஆ-சுன்னி மோதலை ஈரான், சவூதி அறேபியா ஆகிய இரண்டுமே தூண்டி வருகின் றன. சிரியாவில் இன்று ஓடும் இரத்த ஆற்றுக்கு ஈரானே பொறுப்பாக உள்ளது. இவ்விரு நாடு களின் மோதலால் அமெரிக்காவும் இஸ்ரேலுமே இலாபமடைந்து வருகின்றன.

இந்த நடப்பியல் யதார்த்தங்களின் ஊடேதான் சமகால எகிப்தின் இராணுவ மூர்க்கத்தனங் களையும் இஸ்லாமியவாதிகள் மீதான அடக்கு முறையையும் ஜனநாயக விரோத நடவடிக்கை களையும் நாம் பார்க்க வேண்டும்.

# இஸ்லாமிய ஆட்சியைக் கவிழ்த்த உள்ளூர் முகவர்கள் யார்?

ஜூலை 03 இல் இஸ்லாமிய ஆட்சியாளர் கலாநிதி முர்ஸிக்கு எதிராக நடத்தப்பட்ட இராணுவப் புரட்சியை இஸ்லாத்தின் பரம வைரிகளான இஸ்ரேலும் அமெரிக்காவும் திட்டமிட்டது. அதற்கு உள்ளூரில் உடந்தையாக இருந்து இஸ்லாமிய ஆட்சியைக் கலைத்தவர்கள் யார்?

## அப்துல் பத்தாஹ் ஸீஸி



அமெரிக்க இராணுவக் கல்லூரியில் பயின்று, அமெரிக்க நாகரிகத்தையும் கலாச்சாரத்தையும் பின்பற்றி வரும் இவர்தான் இன்றைய எகிப்தின் எழுதப்படாத ஜனாதிபதி. இராணுவப் புரட்சியின் பிதாமகன். கடந்த முபாரக்கின் ஆட்சியின்போது இராணுவத் துறையில் அடிமட்டத்திலிருந்து அடுத்த கட்டப் பதவிகளை அடைந்தவர். இவரை அமெரிக்க பாதுகாப்புச் செயலாளர் ஷக் ஹெகல் சந்தித்து முர்ஸியின் இஸ்லாமிய ஆட்சிக்கு எதிரான சதி ஆலோசனைத் திட்டத்தை நடத்தினார்.

ஸிஸியிற்கு அமெரிக்கா பெருந்தொகை பணத்தை இதற்குக் கைமாறாக வழங்கியுள்ளமை அம்பலமாகியுள்ளது. இப்போது இவர் இஸ்ரேலின் அரச கட்டுப்பாட்டில் உள்ளமை குறிப்பிடத்தக்கது. சினாயில் இன்று நடைபெறும் முஸ்லிம்களுக்கு எதிரான எகிப்திய இராணுவத்தின் கொலை வெறி நடவடிக்கைகளுக்கும் இரத்தக் களரிக்கும் கட்டளையிடும் அதிகாரியாக ஸீஸி இருந்து வருகிறார்.


## இடைக்கால ஜனாதிபதி அத்லி மன்ஸூர்



மக்களால் தெரிவுசெய்யப்பட்ட கலாநிதி முர்ஸியை பதவி கவிழ்த்த பின்னர் இராணுவத்தினால் இடைக்கால ஜனாதிபதியாகப் பதவி அமர்த்தப்பட்டுள்ளவர் அத்லி மன்ஸூர். இவர் அடிப்படையில் ஒரு கிறிஸ்தவர்.

எகிப்தின் அரசியலமைப்புச் சட்டத்தின்படி நாட்டின் தலைவராக இருப்பவரின் பெற்றோர் இருவரும் எகிப்திய பிரஜைகளாக இருக்க வேண்டும். ஆனால், அத்லி மன்ஸூரின் தாய் அமெரிக்கப் பிரஜையாக உள்ள நிலையில், அத்லி மன்ஸூர் எகிப்தின் ஜனாதிபதியாக உள்ளமைதான் இந்நூற்றாண்டின் மிகப் பெரும் வேடிக்கை.


## முஹம்மத் அல்பராதி



பராதி மீது தற்போது தேசத் துரோக குற்றச்சாட்டு சுமத்தப்பட்டு அவர் கைதுசெய்யப்பட வேண்டும் என்று இராணுவ சார்பாளர்கள் பேசி வருகின்றனர். இன்னொரு தகவலின்படி அவர் நாட்டை விட்டு தப்பியோடியுள்ளதாகவும் கூறப்படுகின்றது. எவ்வாறாயினும், ஜூலை 03 இல் நடந்த இராணுவ சதிப் புரட்சியின் முக்கிய சூத்திரதாரிகளுள் ஒருவரான அல் பராதி, முர்ஸி பதவி கவிழ்க்கப்பட்ட அடுத்த கணமே வெளிநாட்டு அமைச்சராக நியமிக்கப்பட்டார்.

பராதி சர்வதேச அணுசக்தி முகவர் நிறுவனத்தின் முன்னாள் தலைவர். கொள்கையளவில் ஷீஆவாக தன்னை அறிமுகப்படுத்தியுள்ள பராதி, ஈராக்கில் பேரழிவு தரும் ஆயுதங்கள் உள்ளதாக முன்னாள் ஜனாதிபதி புஷ்ஷுக்கு பொய்யான தகவல் வழங்கியமையால் ஈராக்கில் 1.5 மில்லியன் மக்கள் அமெரிக்காவினால் கொல்லப்படக் காரணமானார். சமீபத்திய நியூயோர்க் போஸ்ட் பத்திரிகை, பராதி ஒரு வன்முறைக் குழுத் தலைவர் என வர்ணித்துள்ளது.


### அம்ர் மூஸா



இவர் முபாரக்கின் 30 ஆண்டு கால ஆட்சியின் இறுதிக் கட்டத்தில் வெளி நாட்டமைச்சராகப் பணியாற்றியவர். இஸ்ரேலுக்கும் பலஸ்தீனுக்கும் இடையிலான பேச்சவார்த்தைகளின்போது பல சந்தர்ப்பங்களில் மத்தியஸ்தம் வகித்தவர். எனினும், முபாரக்கின் கட்டளைப் பிரகாரம் இஸ்ரேலின் பக்கம் சாய்ந்தவர்.

எகிப்தின் முன்னணி லிபரல்வாதிகளுள் ஒருவராகக் கருதப்படும் அம்ர் மூஸா, ஒரு அமெரிக்க சினேகிதர். கலாநிதி முர்ஸிக்கு எதிரான இராணுவப் புரட்சியின் சூத்திரதாரிகளில் முக்கியமானவர். தற்போது இராணுவ அரசாங்கத்தின் எந்த உயர் பதவியும் வழங்கப்படாத நிலையில் விரக்தியடைந்துள்ளார்.

### அஹ்மத் ஷபீக்



கடந்த ஆண்டில் எகிப்தில் நடந்த ஜனாதிபதித் தேர்தலில் கலாநிதி முர்ஸியை எதிர்த்துப் போட்டியிட்டவர். எனினும், அவர் தேர்தலில் வெற்றி பெறவில்லை. காரணம், இஸ்ரேலின் வேட்பாளராகவே அவர் களமிறங்கினார். அஹ்மத் ஷபீக், முபாரக் ஆட்சியில் முக்கிய புள்ளி என்பது மட்டுமன்றி, ஊழல் மோசடிகளில் மிகவும் பிரபலமானவர்.

தற்போது ஜனாதிபதியாக வேண்டும் என வெறி கொண்டு அலையும் ஸீஸியிற்கும் இவருக்கும் இடையில் கடும் போட்டி ஏற்பட்டுள்ளது. இராணுவத் தரப்பால் தனது பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதாகக் கருதி ஷபீக் நாட்டை விட்டு வெளியேறியுள்ளதாகக் கூறப்படுகின்றது. இதனால் முபாரக் போன்று ஸீஸியும் எந்தப் போட்டியுமின்றி மிகுந்த ஊழல் மோசடிகளோடு ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெறலாம் என மனப்பால் குடித்து வருகிறார்.


### ஹம்தீன் ஸபாஹி



ஹம்தீன் ஸபாஹி முர்ஸிக்கு எதிராக ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்டு தோல்வி கண்டவர். முன்னாள் ஆட்சியாளர் முபாரக்கோடு நெருங்கிய தோழமை கொண்டவர். முர்ஸிக்கு எதிரான இராணுவ சதிப் புரட்சியில் முன்னணிப் பங்கு வகித்த இவர், தற்போது ஸீஸியை ஜனாதிபதித் தேர்தலில் களமிறக்குவதற்கு முனைப்புடன் செயல்பட்டு வருகிறார்.


லிபியாவில் கேர்ணல் கடாபியின் ஆட்சியைப் போன்று எகிப்திலும் ஸீஸியினால் ஒரு நல்லாட்சியைக் கொண்டு செல்ல முடியும் என இராணுவத் தளபதியை ஆட்சிக்குப் பரிந்துரை செய்துள்ளார்.

## சர்வதிகாரி முபாரக் விடுதலை?



எகிப்தின் அறபு வசந்தத்தின் மூலம் பதவி கவிழ்க்கப்பட்ட முபாரக் பல்வேறு குற்றச்சாட்டுக்களின் நிமித்தம் சிறைத் தண்டனை வழங்கப் பட்டார். அவருக்கெதிரான ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட பொது மக் களை சுட்டுக் கொல்வதற்கு ஆணையிட்டார் என்பது பிரதான குற்றச்சாட்டு. அதேபோன்று முபாரக் பதவி விலகியபோது அவரது மொத்தச் சொத்து விபரம் 50 மில்லியன் அமெரிக்க டொலர் என மதிப்பிடப்பட்டிருந்தது.

30 ஆண்டு கால ஆட்சியில் அவர் மேற்கொண்ட ஊழல் மோசடிகள் அவருக்கெதிரான அடுத்த பிரதான குற்றச்சாட்டாகும். எனினும், முர்ஸி பதவி கவிழ்க்கப்பட்ட பின்னர் இக்குற்றச் சாட்டிலிருந்து முபாரக்கை இராணுவ ஆட்சியாளர் விடுவித்துள்ளதோடு, அவரை வீட்டுக் காவலில் வைத்துள்ளது. சுமாராக முபாரக் மீதான சகல குற்றச்சாட்டுகளும் நீக்கப்பட்டு, முபாரக் விடுதலை செய்யப்பட்டுள்ளார் என்றே உள்ளூர் ஊடகங்கள் தெரிவிக்கின்றன.



FJP கட்சியின் பேச்சாளர் ஜிஹாத் அல் அத்தாத்

# முர்ஸிக்கு எதிரான ஆர்ப்பாட்டத்தில் களமிறக்கப்பட்டவர்கள்

தஹ்ரீரில் கலாநிதி முர்ஸிக்கு எதிராக இடம் பெற்ற எதிர்த்தரப்பு ஆர்ப்பாட்டத்தில் நான்கு வகையானோர் அடங்கியுள்ளனர்.

முதலாவது வகையினர், முன்னைய ஆட்சியின் எச்ச சொச்சங்களாவர். முபாரக்கினது நெருங் கிய ஆதரவாளர்களும் வர்த்தகப் புள்ளிகளும் முபாரக்கினது கட்சி குடும்பத்தினரும் இதில் அடங்குவர். இவர்கள் ஜனநாயகம் மலர்வதை மிகவும் அச்சத்துடன் பார்க்கின்றனர்.

இந்த முதலாவது வகையினரிடம் பெருமளவு வளங்களும் பணமும் உள்ளது. நீண்ட காலம் ஆட்சியில் இருந்ததால் வன்முறையையும் குண்டர்களையும் பயன்படுத்துவதில் இவர்கள் தேர்ந்தவர்கள். இவர்கள் கொள்ளையிட்ட நாட்டின் சொத்துக்களுக்குப் பதிலளிக்க வேண்டி வரும் என்ற பயம் இவர்களுக்கு உண்டு. தங்களது நலனுக்கு எதிராக புரட்சிக்குப் பிந்திய ஆட்சி அமைந்து வருவதால், அதனைக் கவிழ்ப்பதே இவர்களது இலக்காக இருந்தது.

இரண்டாவது வகையினர், நாட்டின் மீது அக்கறை கொண்ட எதிர்க்கட்சியினர். தங்களது குரலையும் அபிலாஷையும் வெளிப்படுத்த தளம் இல்லை என இவர்கள் கருதுகின்றனர். இதற்கு பாராளுமன்றத் தேர்தலை நடத்துவது தான் ஒரே தீர்வாகும். பாராளுமன்றம் இல்லாத நிலையில் எப்படி இவர்களது அபிலாஷைகளை உள்வாங்குவது என்பதில் குழப்பம் உள்ளது.

மூன்றாவது வகையினர், கெட்ட உள்நோக்கம் கொண்ட இன்னொரு வகை எதிர்க்கட்சியினர். முர்ஸியினை அகற்றி, அதிகாரத்தை அடைவது மட்டுமே இவர்களது குறுகிய நோக்கமாகும்.

நான்காவது தரப்பினர், அரசாங்கத்தின் நன்மை கள் தம்மை வந்தடையவில்லை எனக் கருதும் பொதுமக்கள் ஆவர். அவர்களின் கோரிக்கைகளில் நியாயங் கள் உள்ளன. ஆனால், இப்போதிருக் கும் அரசாங்கத்தின் கீழ் இயங்கும் அதிகார வர்க் கம் பழைய அரசினால் நியமிக்கப்பட்டதாகும். இந்த அதிகார வர்க்கத்தை வைத்துக் கொண்டு ஆட்சியைக் கொண்டு செல்வதில் பல தடங்கல் கள் உள்ளன. இதன் காரணமாக மக்களுக்குப் பல சேவைகளைக் கொண்டு சேர்ப்பதில் தடைகள் ஏற்பட்டன என ஹத்தாத் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி முர்ஸியின் சர்வதேச விவகாரங்களுக்கான ஆலோசகர் கலாநிதி இஸாம் அல் ஹத்தாத், ஜூலை 3 ஆம் திகதி எழுதிய கடிதத்தின் சில வரிகளை இங்கு குறிப்பிடுவது மிகப் பொருத் தமானது.

''இந்த வரிகளை நான் எழுதுகின்றபோது இப் பதவியிலிருந்து எழுதும் கடைசி வரிகளாக இருக் கும் என்பதை முழுமையாக அறிந்தே எழுதுகி றேன். எகிப்துக்காகவும், அதன் வரலாற்று உண் மைக்காகவும் சில விடயங்களை பேச வேண்டி யுள்ளது. இப்போது இடம்பெறுவது இராணுவ சதிப் புரட்சியே அன்றி வேறொன்றில்லை.''

''எகிப்தை 30 வருடங்களாக கொடும் பிடியில் வைத்திருந்த சர்வாதிகாரத்தை மக்கள் தூக்கி வீசி இப்போது இரண்டரை வருடங்கள் கடந்து விட் டன. இந்தப் புரட்சி எகிப்தியர் மத்தியில் எதிர் காலம் பற்றிய பல கனவுகளை விதைத்தது. ஜன வரி 25 இல் நான் தஹ்ரீர் சதுக்கத்தில் இருந்தேன். புரட்சிக்காக தியாகங்களைச் செய்வதற்கு நாம் தயாராக இருந்தோம்.''

''ஒரு விடயத்தை நான் அழுத்தமாகச் சொல்ல விரும்புகிறேன். இவ்வளவு பெருந்தொகையான மக்களை இரத்தம் சிந்தாமல் எதிர்கொள்வதற்கு எந்த இராணுவப் புரட்சியாலும் முடியாது. உங்க ளில் யார்தான் அந்தச் சுமையை சுமப்பீர்கள்?''

''எகிப்தில் நிகழ்ந்த விடயங்கள் குறித்து நான் விரிவாகப் பேச விரும்பவில்லை. ஆனால், என்றோ ஒரு நாள் வரலாறு அதனைச் சரியாகப் பதிவு செய்யும்.''

# அதிகாரம் இரத்தத்தை விடவும் சுவையானது...



இன்ஸாப் ஸலாஹுதீன்

பிணங்களை ஒதுக்கி
முடியாத வேளையில்
மிதித்தே முன்னேறினேன்
மனிதம் நசுங்கித் தொலைந்தது.

உலகம் கொலைக் களமாக மாறும் ஒவ்வொரு கணமும் இக்கவிதை எனக்குள் தோன்றி என்னை உணர்விழக்கச் செய்துவிடுகிறது. இலங்கையில் யுத்தம் முடிந்த போது முதன் முதலாக A-9 வழியே பயணித்த போது காற்றெல்லாம் அழுகையின் குரல்களும் ஒப்பாரிகளும் என் செவிகளுக்குள் கேட்பது போலத் தோன்றியது.

வெள்ளைப் புறாக்களின் வானில் போரின் புகை மூட்டமும் தெருவெங்கும் குண்டுகளின் வாசனையும் என் தேசத்திலும் குடிகொண்டிருந்த ஒரு காலம் இருந்தது.

மண்ணுக்குள் புதைந்து போன மனித சாட்சியங்கள் நூற்றாண்டுக் கவலைகளை வாழ்க்கையின் வழியெங்கும் விட்டு விட்டுப் போயினர். யுகம் யுகமாக அழுவதற்கு அவர்களிடம் கண்ணீர் இருந்தது. துடைப்பதற்குத்தான் கைகள் இருக்கவில்லை.

போர் என்பது எத்தனை துர்ப்பாக்கியம் நிறைந்தது!? இந்த உலகின் மனசாட்சியை அது பிழிந்து கொண்டிருக்கிறது. இதுவரை இவ்வுலகில் எத்தனை பீப்பாய் மனித இரத்தம் ஓட்டப்பட்டிருக்கிறது?

எகிப்தினதும் சிரியாவினதும் பட்டப் பகல் மனிதப் படுகொலைகள் உலகத்தின் மனசாட்சியையே உலுக்கிக் கொண்டிருக்கிறது. பல்லாயிரம் உயிர்கள் கொன்று குவிக்கப்பட்டு விட்டன. நீதி குற்றவாளிக் கூண்டில் இருக்கிறது.

குழந்தைகள், பெண்கள், இளைஞர்கள், முதியவர்கள் என பாகுபாடின்றி சுட்டுக் கொல்லப்படும் இவர்களது காணொளிகள் கண்களை ஈரமாக்குகின்றன. ஹபீபாவினதும் அஸ்மாவினதும் மரணம் என்னை வெகு வாகவே பாதித்தது.

தம் வாழ்நாளின் மிகக் குறைந்த ஆயுளை அவர்கள் ஒரு போராட்டத்திற்கு அர்ப்பணித்திருக்கிறார்கள். அடக்குமுறைக்கும் அதிகாரத்திற்கும் எதிரான தசாப்த காலப் போராட்டம் ஒரு முக்கிய சந்தியை வந்தடைந்திருக்கிறது.

என்ன விலை கொடுத்தேனும் பறிக்கப்பட்ட ஜனநாயகத்தை, புரட்சியை வென்றெடுக்கும் தீராத போராட்டத்தை என்றாவது ஒரு நாள் அவர்கள் வென்றெடுப்பார்கள். அப்போது இந்த உலகம் நீதிக்குச் செய்த துரோகத்தையிட்டுத் தலைகுனியும்.

எகிப்தினதும் சிரியாவினதும் மனிதப் படுகொலைகளுக்காக இந்த உலகம் ஏன் ஒரு சொட்டுக் கண்ணீரை சிந்தக் கூடாது?

அதிகாரம் இரத்தத்தை விட சுவையானது என்பதை ஸீஸியும் ஏனைய அராஜகவாதிகளும் திரும்பத் திரும்ப உலகிற்கு உணர்த்த முயல்கின்றனர். இது வரலாற்றில் ஒன்றும்

முதற்தடவை நடப்பதல்ல. மனிதர்களின் இரத்தம் குடித்த வெறியர்கள் தலைமைகளாகத் திரிந்தவர்கள்தாம்.

வரலாறு ஒன்றையும் மறைப்பதில்லை. நிகழ்வுகளை வேண்டுமானால் மனிதர்கள் மறந்துவிடலாம். ஆனால் வரலாற்றுத் துரோகங்களுக்கான பழியை அது தீர்க்காமல் விடுவதில்லை.

''என் தாய்நாடு! என் தாய்நாடு! என் தாய்நாடு!'' இது எகிப்தின் தேசிய கீதம். நாட்டை வளப்படுத்த நினைப்பவர்களை ஸீஸியின் இராணுவம் வன்மையான முறையில் குரூரமாகக் கொலை செய்கிறது. இத்தனை உயிர்களைப் பலி கொடுத்த சாத்வீகப் போராட்டம் ஒருபோதும் தோற்றுப் போகாது. அப்பாவி மனிதர்களின் இரத்தம் உலக ஆடம்பரங்களையும், அதிகாரத்தையும் விடப் பெறுமதியானது, பலம் வாய்ந்தது என்பதை அவர்கள் உணர்ந்து கொள்ளும் ஒரு காலம் நிச்சயம் வரத்தான் போகிறது.



அநியாயக்காரர்கள், மனித மிருகங்கள், தம் ஈனச் செயல்களுக்காக அப்போது வருந்துவார்கள். மானுட வர்க்கத்தின் மனசாட்சிக்கு முன்னால் அப்போது அவர்கள் படும் இழிவுக்கு அளவே இருக்காது.

ஆயுதங்களை உயிர்களைக் கொண்டு எதிர் கொள்ளும் வீரர்களுக்கு இந்த வானமும் பூமியும் வாழ்த்துத் தெரிவிக்கிறது. எகிப்திய இராணுவத்தால் கோழைத்தனமான தாக்குதல்களையே செய்ய முடிகிறது. உயிரை உள்ளங் கைகளில் வைத்துக் கொள்ளும் துணிச்சல்மிக்கவர்கள் தம் போராட்டப் பாதையில் சிரித்துக் கொண்டே மரணிக்கின்றனர். அவர்களுக்கு என் இதயம் கனத்த அஞ்சலிகள்.

# ரஷ்யாவின் முயற்சி சிரியாவின் மீதான தாக்குதலைத் தடுக்க முடியாது



சிரியா மீதான தாக்குதலை நிறுத்துவதற்கு ரஷ்யா கடும் பிரயத்தனங்களில் இறங்கியுள்ளது. எனினும், சிரியாவின் நிலைமைகளை நோக்கும்போது ரஷ்யாவின் முயற்சி வெற்றியளிக்காது எனவும் சிரியா அமெரிக்கத் தாக்குதலுக்கு இலக்காகுவதை தவிர்க்க முடியாது எனவும் வளைகுடா ஒத்துழைப்பு சபை அமைச்சர்கள் தெரிவித்துள்ளனர். ஜித்தாவில் நடைபெற்ற கூட்டத் தொடரில் கருத்து வெளியிட்டபோதே வளைகுடா ஒப்பந்த ஒத்துழைப்பு சபை இவ்வாறு தெரிவித்துள்ளது.

சிரிய அரசாங்கம் இரசாயன ஆயுதங்களை பொதுமக்களுக்கு எதிராகப் பயன்படுத்தியுள்ளதாக அமெரிக்கா, பிரான்ஸ் போன்ற நாடுகள் குற்றம் சுமத்தி வருவதோடு, சிரியா மீது இராணுவ நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும் எனவும் கூறி வருகின்றன.

ரஷ்யா இது குறித்து மாறுபட்ட நிலைப்பாட்டைக் கொண்டுள்ளது. சிரிய அரசாங்கத்தோடு பேச்சுவார்த்தை நடத்துவதன் மூலம் இராணுவ ரீதியான நடவடிக்கைகளைத் தவிர்க்க வேண்டும் என்பதே ரஷ்யாவின் நிலைப்பாடு.

சிரியா தொடர்பாக அமெரிக்க இராஜாங்க செயலாளர் ஜோன் கெரி மற்றும் ரஷ்ய வெளிவிவகார அமைச்சர்களுக்கிடையில் பேச்சுவார்த்தைகள் நடைபெற்றுள்ளபோதும், கருத்தொருமைப்பாடுகள் எதுவும் ஏற்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது.

சிரியா தன்னிடமுள்ள இரசாயன ஆயுதங்களை வல்லரசுகளிடம் மீள ஒப்படைக்கும் பட்சத்தில் தாக்குதல் நடவடிக்கை நிறுத்தப்படும் என ஒபாமா கேட்டுள்ளதை சிரிய வெளிநாட்டமைச்சர் வலீத் முஅல்லிம் ஆட்சேபித்துள்ளார்.


எகிப்து

எல்லைகள்: வடக்கில் மத்திய தரைக்கடல், கிழக்கில் செங்கடல், மேற்கே லிபியா, தெற்கில் சூடான், வடமேற்கில் பலஸ்தீன்

பரப்பு: 1000258 சதுர கி.மீ

காலநிலை: பாலைவனப் பிரதேசங்கள் வெப்பம் மிகுந்தவை, நைல் கரையோரங்கள் ஈரலிப்பானவை. மிக குறைந்த மழை வீழ்ச்சி கொண்ட நாடு. நைல் நதியின் மூன்றில் ஒரு பகுதி எகிப்தை ஊடறுக்கின்றது.

ஆலிப் அனாம்







மன்னர் புவாத்


மன்னர் பாரூக்


முஹம்மத் நஜீப்


ஜமால் அப்துந் நாஸர்


அன்வர் ஸாதாத்


ஹுஸ்னி முபாரக்

# எகிப்து அரசியல் வரலாறு குறித்த சுருக்க அறிமுகம்

எகிப்து வரலாற்றுக் காலத்துக்கு முந்தியது. அதன் வரலாறு மிகவும் பழைமையானது. உலக நாகரிகத்துக்கும் கலாசாரத்துக்கும் பாரிய பங்களித்துள்ள எகிப்தியர்கள், இனத்தில் செமித்தியர்கள் என அறியப்படுகின்றனர். உலக நாகரிகங்களில் எகிப்திய நைல் நாகரிகம் முதன்மையானது. உலோகம், வெண்கலம், செம்பு, இரும்பு போன்றவற்றை பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பாகவே எகிப்தியர்கள் பயன்படுத்தியுள்ளனர். கிரேக்கர்கள் கணிதம், வானியல் ஆகியவற்றை எகிப்தியர்களிடம்தான் கற்றுள்ளனர்.

சுமார் 8500 ஆண்டு கால சமூக வரலாறு கொண்ட எகிப்துக்கு 6500 ஆண்டு கால நீண்ட அரசியல் வரலாறும் உள்ளது. மீனிஸ் அல்லது மீனா என்ற பெண் மணியே எகிப்தை முதலில் ஆட்சி செய்தவள் என்ற வரலாற்றுத் தகவல் இதுவரை கிடைக்கப் பெற்றுள்ளது. கி.மு 4500 ஆம் ஆண்டளவில் மீனா அங்கு ஆட்சி நடாத்தியுள்ளார். இவளது பரம்பரையில் தோன்றிய கீயாப்ஸ் மன்னன் கெய்ரோவுக்கு அருகில் 481 அடி உயரமான பிரமிட்களை நிர்மாணித்தான் என்று வரலாறு கூறுகின்றது.

20 அரச வம்சங்கள் இதுவரை எகிப்தை ஆட்சி செய்துள்ளன. தொடக்க கால மன்னர்கள் பிர்அவ்ன்கள் (Pharaoh). அவர்களுக்கு பின்னர் பாரசீகர்கள் சிறிது காலம் எகிப்தை ஆட்சி செய்தனர். தொடர்ந்து மகா அலெக்சாண்டர் கி.மு 331 இல் எகிப்தை கைப்பற்றினார். இவரே இன்றுள்ள இஸ்கந்திரியா (அலெக்சாண்ட்ரியா) நகரத்தை நிர்மாணித்தார். மகா அலெக்சாண்டருக்குப் பின்னர் அவரது தளபதியான டொலமியும் அவரது வழித்தோன்றல்களும் எகிப்தை ஆண்டனர்.

டொலமி அரச பரம்பரையின் இறுதி ஆட்சியாளரே கிளியோபெட்ரா. கி.மு 30 முதல் கி.பி 395 வரை எகிப்து ரோம சாம்ராஜ்யத்தின் கீழ் இருந்தது.

### இஸ்லாமிய ஆட்சியின் கீழ் எகிப்து

இரண்டாம் கலீபா உமர் அவர்களின் ஆட்சிக் காலத்தில் பைதுல் முகத்தஸ் வெற்றி கொள்ளப் பட்டதற்குப் பின்னர் சிரியாவின் தற்போதைய தலைநகர் டமஸ்கஸுக்கு அருகில் 2ஆம் கலீபா பெரும் அரசியல் கூட்டமொன்றை நடாத்தினார். அதில், இஸ்லாமிய தளபதிகள் பலர் கலந்து கொண்டனர். அக்கூட்டத்தில்தான் எகிப்து கைப் பற்றப்பட வேண்டும் எனவும் அது இஸ்லாமிய சாம்ராஜ்யத்தின் கீழ் கொண்டு வரப்பட வேண்டும் எனவும் தீர்மானிக்கப்பட்டது.

எகிப்தின் புவி அரசியலும் பொருளாதார, பண்பாட்டு முக்கியத்துவமுமே 2 ஆம் கலீபா உமரின் இத்தீர்மானத்துக்கான காரணமாகும். ஆசிரிய ஆபிரிக்க ஐரோப்பிய முச்சந்தியில் உள்ள எகிப்து, உலகின் பல நாடுகளுக்கான கேந்திர நிலையமாகவும் விளங்குகின்றது.

எகிப்தை இஸ்லாமிய மயமாக்கல் பல நாடுகளுக்கு இஸ்லாத்தின் தூதை முன்வைப்பதற்கு ஏதுவாக அமையும் என்பது உமரின் தீர்க்க தரிசனமாகும். கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவின் நிமித்தம் எகிப்தை வெற்றி கொள்ளும் பொறுப்பு, தளபதி அம்ர் இப்னு ஆஸ் (ரழி) அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. அன்று முதல் எகிப்தைக் கைப்பற்றுவதற்கான இராணுவ தந்திரோபாயங்கள் வகுக்கப்பட்டன. இஸ்லாமியப் படையொன்று தயாராகியது.

கி.பி 624 செம்படம்பர் 17 இல் முஸ்லிம் படை அலெக்சாண்ட்ரியா நகரை வெற்றி கொண்டது. கி.பி 668 வரை அதன் கவர்னராக அம்ர் இப்னு ஆஸ் பணியாற்றினார்கள். அலெக்சாண்ட்ரியா நகரம் கடல் மார்க்கமாக ரோமர்களின் அச்சுறுத்தல்களுக்கு இலக்காகி இருந்ததனாலும் கிலாபத்தின் தலைநகர் மதீனாவுக்கு மிக தூரமாக இருந்ததனாலும் அலெக்சாண்ட்ரியா தலைநகரம் எனும் நிலையிலிருந்து மாற்றப்பட்டது. அம்ர் இப்னு ஆஸ், புஸ்தாத் நகரை நிர்மாணித்து முதல் மஸ்ஜிதையும் அங்கு நிறுவி அதையே இஸ்லாமிய கிலாபத்தின் தலைநகராக மாற்றினார். அங்கு நிறுவப்பட்ட மஸ்ஜித் அம்ர் இப்னு ஆஸ் இன்றும் அதே பெயரில் உள்ளது.

நாற்பெரும் கலீபாக்களைத் தொடர்ந்து உமைய, அப்பாஸிய ஆட்சியின் கீழ் சுமார் 200 ஆண்டு காலம் எகிப்து இருந்தது. இவ் 200 ஆண்டு கால இடைவெளியில் ஓர் இஸ்லாமிய சமூகம் அங்கு உருவாகியது. அப்பாஸியர் பலயீனமுற்றிருந்த காலத்தில் துருக்கியரான அஹ்மத் இப்னு தூலூன் எகிப்தின் ஆட்சியாளரானார். இவரது வழித்தோன்றல்கள் கி.பி 768 முதல் 905 வரை எகிப்தை ஆண்டனர். இக்ஷிதுகள் எனும் துருக்கிய பரம்பரையும் சிறிது காலம் எகிப்தை ஆண்டது.


பாத்திமிய தளபதி ஜௌஹர் துருக்கியருக்கு எதிராக போராடி எகிப்தை வெற்றி கொண்டார். இவரே இன்றுள்ள ''காஹிரா'' என அழைக்கப்படும் கெய்ரோ நகரையும் அல்அஸ்ஹர் பல்கலைக்கழகத்தையும் ஆரம்பித்தார். இக்காலத்தில் வட ஆபிரிக்காவின் லிபியா, சிசிலி, மேற்கு அரேபியா என்பனவும் பாதிமிய்யீன்களின் ஆட்சியில் இருந்தன. பாதிமிய ஆட்சியாளர் முஸ்தன்ஸிரின் காலம் பாதிமிமிய ஆட்சி பலயீனமடைந்தது.

விளைவாக சிலுவைக்காரர்களின் ஆதிக்கம் பிராந்தியத்தில் அதிகரித்தது. அவர்கள் பைதுல் முகத்தஸை மீளவும் கைப்பற்றும் நிலை உருவாகியது. அதன்போது பாதிமிய்ய ஆட்சியில் அமைச்சராக இருந்த ஸலாஹுத்தீன் கி.பி 1169 இல் தாமே ஆட்சியாளராக மாறி சிலுவைக்காரர்களை தோற்கடித்து பைதுல் முகத்தஸைக் கைப்பற்றினார். ஸலாஹுத்தீன் ஐயூபியின் ஆட்சியை அடுத்து ஐயூபிய வம்ச ஆட்சி 1257 வரை நீடித்தது. 1517 வரை மம்லூக்கியர்கள் எகிப்தை ஆண்டனர். அவர்களில், அந்நாஸிர் காஇத்பே குறிப்பிடத் தக்கவர்.

1517 இல் துருக்கிய உஸ்மானியரான 1ஆம் ஸலீம் எகிப்தை வெற்றி கொண்டார். 1798 இல் நெப்போலியன் எகிப்தினை கைப்பற்றியபோதும் 3 ஆண்டுகளுக்கு மேல் அவரால் நின்று பிடிக்க முடியவில்லை. எகிப்தில் துருக்கிய ஆளுனராக நியமிக்கப்பட்ட முஹம்மத் அலி பாஷா கலீபாவின் கட்டுப்பாட்டிலிருந்து தன்னை விடுவித்து தன்னை எகிப்தின் சுதந்திர ஆட்சியாளராக பிரகடனம் செய்தார். அதிலிருந்து எகிப்து படிப் படியாக உஸ்மானிய சாம்ராஜ்யத்தின் ஆதிக்கத்திலிருந்து விடுபடத் தொடங்கியது.

பிரிடிஷ்காரர்கள் 1882 இல் சுயெஸ் கால்வாயை உரிமை கோரி எகிப்தில் ஊடுருவினர். இதனால் எகிப்தியர்களுக்கும் ஆங்கிலேயர்களுக்கும் இடையில் கடும்போர் நடந்தது. எகிப்தியப் படை தோற்கடிக்கப்பட்டது. ஆங்கிலேயருக்கு எதிராக புரட்சி செய்தவர்களில் ஒராபி பாஷாவும் ஒருவர். அவர் இலங்கைக்கு நாடு கடத்தப்பட்டார். படிப் படியாக எகிப்தில் ஆங்கிலேயரின் செல்வாக்கு அதிகரித்ததோடு 1922 ஆம் ஆண்டு வரை பிரிட்டனின் கொலனியாக அந்நாடு இருந்து வந்தது.

1922 பெப்ரவரி 23 இல் பிரிட்டிஷ், எகிப்தை சுதந்திர நாடாக அங்கீகரித்தது. ஆனால், அதிகாரங்கள் அனைத்தும் பிரிட்டன் வசமே இருந்தது. எகிப்தின் முதல் சுல்தானாக தன்னை நிலை நிறுத்திக் கொண்ட மன்னர் புவாத் பெயரளவிலான ஆட்சியாளராகவே இருந்தார். பின்னர் நடைபெற்ற தேர்தலில் சுதந்திர விடுதலைப் போரில் கலந்து கொண்ட ஸஃத் ஸஃலூல் ஸ்தாபித்த வப்த் கட்சி பெரும்பான்மை பெற்றது. 1927 இல் ஸஃலூல் இறக்க, நவாஸ் பாஷா, வப்த் கட்சியின் தலைவராகி தேர்தலில் வென்று முதலமைச்சரானார். அவ்வாண்டிலேயே மன்னர் புவாத் மரணிக்க அவரது மகன் பாரூக் மன்னரானார். 1945 முதல் 52 வரை பாரூக்கின் எதேச்சதிகாரம் தொடர்ந்தது. 1948இல் மூண்ட முதல் அறபு-இஸ்ரேல் யுத்தத்தில் மன்னர் பாரூக் தனது படைகளை அனுப்பினார். 1952 ஜூலை 23 இல் தளபதி நஜீபின் தலைமையில் நடந்த புரட்சியின் மூலம் எகிப்து குடியரசாக பிரகடனம் செய்யப்பட்டது. நஜீப் குடியரசின் புதிய தலைவரானார்.



இந்த இராணுவ சதிப் புரட்சிக்கு ஜமால் அப்துந் நாஸரினால் உருவாக்கப்பட்ட சுதந்திர ஊழியர்கள் இயக்கமே பின்னணியில் இருந்தது. 1954 இல் ஜமால் அப்துந் நாஸர் பிரதமரானதோடு, 1956 இல் ஜனாதிபதியானார். நாஸரின் ஆட்சிக் காலம் மிகவும் கறைபடிந்தது. நவீன பிர்அவ்னிய கொடுங்கோன்மைக்கு பிரபல்யமானவர் நாஸர். 1960 களில் இஸ்லாமிய சகோதாரத்துவ இயக்கத்தின் மீது அவர் கட்டவிழ்த்த படுகொலைகளும் சித்திர வதைகளும் மயிர்க் கூச்செறியக்கூடியவை.

1970 இல் மாரடைப்பு காரணமாக நாஸர் இறந்து போனார். அவரது உப ஜனாதிபதியாக இருந்த அன்வர் ஸாதாத் ஜனாதிபதியானர். 1979 இல் இஸ்ரேலுடனான கேம்ப்டேவிட் ஒப்பந்தத்தில் அன்வர் ஸாதாத் கைச்சாத்திட்டமை குறித்த பெரும் அதிருப்தி அலைகள் அவரது சொந்த இராணுவ வட்டாரங்களிலேயே பலமாக எழுந்தது. அதன் விளைவாகவே 1981 ஒக்டோபரில் இராணுவ அணி வகுப்பொன்றில் ஸாதாத் கலந்து கொண்டிருந்த சமயம் அவரது சொந்த இராணுவ வீரர் ஒருவரால் சுட்டுக் கொல்லப்பட்டார். துரதிஷ்டவசமாக சகோதரத்துவ அமைப்பினர் மீது பழி போடப்பட்டது. அன்வர் ஸாதாத்தின் மரணத்தை அடுத்து 1981 இல் இராணுவ அதிகாரியாகப் பதவி வகித்த முபாரக் ஜனாதிபதியாகப் பதவியேற்றார்.

2011இல் மக்கள் புரட்சியொன்றின் மூலம் முபாரக் பதவியில் இருந்து தூக்கி வீசப்படும் வரை சுமார் 30 ஆண்டு காலம் எகிப்தின் நவீன பிர்அவ்னாக தன்னை நிலைநிறுத்தியிருந்தார். அவரது 30 ஆண்டு காலம் நாஸரிய கொடுங்கோன்மையின் நீட்சியாகவே கொள்ளப்படுகிறது. 1922 இல் சுதந்திரம் அடைந்த எகிப்தில் கடந்த 80 ஆண்டு காலமாக எந்தவொரு ஜனநாயகத் தேர்தலும் நடாத்தப்படவில்லை. ஊழலும் மோசடி களும் நிறைந்த இந்நாட்டில் ஜனநாயகம் மலர்வதை மேற்கு நாடுகள் ஆதரிக்கவும் இல்லை.

சர்வாதிகாரம் அங்கு வீற்றிருப்பதே பிற அறபு நாடுகளுக்கும் மேற்குலகுக்கும் சாதகமாக இருந்தது. எனினும், முபாரக் 30 ஆண்டு கால இராணுவக் கொடுங்கோன்மையை, அதன் மோசமான விளைவுகளை அனுபவித்த மக்கள் 2011 இல் வீதிக்கு இறங்கினர். விளைவு முபாரக் பதவி விலகினார்.

6500 ஆண்டு கால அரசியல் வரலாற்றைக் கொண்ட எகிப்தில் 2012 இல் முதன் முதலாக நடைபெற்ற ஜனநாயகத் தேர்தலில் கலாநிதி முர்ஸி வெற்றி பெற்றதோடு, அரசியலமைப்பு சபைக்கான தேர்தலிலும் அவர் சார்ந்திருந்த சகோதரத்துவ இயக்கம் பெரும்பான்மை ஆசனங்களைப் பெற்றது. துரதிஷ்டவசமாக 365 நாட்கள் கழிந்த பின்னர், கடந்த 365 நாட்களிலும் அமெரிக்கா, இஸ்ரேல், சவூதி அறேபியா, ஐக்கிய அறபு எமிரேட்ஸ் ஆகிய நான்கு நாடுகளும் தீட்டி வந்த சர்வதேச சதித்திட்டமொன்றின் மூலம் இராணுவத்தை வைத்து முர்ஸி பதவி கவிழ்க்கப்பட்டார். சகோதரத்துவ அமைப்பின் முன்னணித் தலைவர்களும் கைதுசெய்யப்பட்டுள்ளனர். எகிப்தின் இன்றைய நிலவரங்கள் மீளவும் பிர்அவனிய யுகத்தை நோக்கி எகிப்தை இழுத்துச் சென்றது.

# தோற்றுப் போகும்

## களத்திலிருந்து விலகியோ

## இலாபமீட்டி வரு

றவூ



# ம் இராணுவ ஆட்சி

## யோடும் லிபரல்வாதிகளும்
## வரும் இஸ்ரேலும்

றவூப் ஸெய்ன்




ஜனநாயக ரீதியில் தெரிவுசெய்யப்பட்ட இஸ்லாமியத் தலைவர் ஜனாதிபதி கலாநிதி முர்ஸி, தனது 365 நாள் பதவிக் காலத்தில் மக்கள் எதிர்பார்த்த எதனையும் வழங்கவில்லை என்ற குற்றச்சாட்டோடு ஆட்சியிலிருந்து சதிகாரர்களால் கவிழ்க்கப்பட்டார். இன்று இராணுவ ஆட்சியில் எகிப்துக்கு என்ன நேர்ந்துள்ளது என்பது முன்பு எதிர்வு கூறப்பட்டதே. ஆயினும், இந்தளவு பின்னடைவும் ஆபத்தான விளைவுகளும் ஏற்படும் என சதித் திட்டத்தின் பங்காளர்களே எதிர்பார்த்திருக்கவில்லை என்பதுதான் ஆச்சரியமானது.

முர்ஸியை பதவி கவிழ்க்க பணம் வழங்கப்பட்டு பகடைக்காய்களாகப் பயன்படுத்தப்பட்ட மக்கள் களத்திலிருந்து ஓடிவிட்டனர். இராணுவத்தோடு இணைந்து முர்ஸியை கவிழ்த்த லிபரல்வாதிகள் சிலர் மீது தேசத் துரோக குற்றச்சாட்டு சுமத்தப்பட்டு இராணுவ நீதிமன்ற விசாரணைகளுக்கு ஆளாகியுள்ளனர். பராதி, முர்ஸியைப் பதவி கவிழ்ப்பதில் முன்னணியில் இருந்தவர். இப்போது நாட்டை விட்டு தப்பியோடாத வண்ணம் அவர் மீது விசாரணை அழுத்தங்கள் குவிந்துள்ளன.

ஸீஸியின் கொடூரங்களைப் பார்த்த அஹ்மத் ஷபீக், தான் அடுத்த தேர்தலில் இறங்கப் போவதில்லை என்று அறிவித்து விட்டார். இடைக்கால அரசில் முக்கிய அமைச்சர்கள் பலர் வீட்டுக் காவலில் வைக்கப்பட்டுள்ளனர். இவ்வாறு லிபரல்வாதிகள், நூர் கட்சியினர் என அனைவரும் அதிர்ச்சியில் உறைந்து போகும் அளவுக்கு இராணுவத்தின் அதிரடி மாற்றங்கள் நிகழ்ந்த வண்ணமுள்ளன.

இராணுவ பொதுப் புத்திக்கு அப்பால் எகிப்து எதிர்நோக்கும் ஆபத்தான சவால்கள் குறித்து லிபரல்வாதிகளே எச்சரிக்கத் தொடங்கியுள்ளனர். எகிப்தில் சிவில் சமூகத்தின் சுதந்திரம், மனித உரிமைகள், அரசியல் பன்மைத்துவம், வெளிப்படைத் தன்மை என்பன மொத்தமாகவே குழிதோண்டிப் புதைக்கப்பட்டுள்ளன.

பொருளாதார ரீதியில் வரலாற்றில் என்றுமில்லாதவாறு எகிப்து பின்னடைந்துள்ளது. முர்ஸியை பதவி கவிழ்க்காதீர்கள். அவருக்குப் பின்னர் படுமோசமான அதிகாரக் கும்பலே ஆட்சிக்கு வரும் என்று பலர் எச்சரித்தபோதும், லிபரல்வாதிகள் அதை செவியேற்கவில்லை. அதன் அத்தனை விளைவுகளையும் இன்று இந்நாடு அனுபவிக்க நேர்ந்துள்ளது.



### 1. இஸ்லாமிய அரசியலமைப்புச் சட்டம் தூக்கி வீசப்பட்டுள்ளது.

இராணுவம் பதவிக்கு வந்தவுடனேயே இஸ்லாமிய அரசியலமைப்புச் சட்டத்தை தூக்கி வீசியுள்ளதோடு, மீண்டும் மதச்சார்பற்ற, இஸ்லாம் அல்லாத சட்டங்களைக் கொண்டு வருவதற்கான முயற்சியில் இறங்கியுள்ளது. முர்ஸி பதவிக்கு வந்த பின்னர் ஷரீஆவின் அடிப்படையிலான ஓர் அரசியலமைப்பை உருவாக்கியதோடு, அது பொதுமக்கள் வாக்கெடுப்புக்கு விடப்பட்டுது 64% வாக்குகளோடு வெற்றியீட்டியது.

எகிப்து ஒரு இஸ்லாமிய நாடு எனவும், குர்ஆனும் ஹதீஸுமே அதன் சட்ட யாப்பாக இருக்கும் எனவும் அந்த அரசியலமைப்பின் முதல் ஷரத்து குறிப்பிடுகின்றது. இதைத்தான் இன்று இராணுவம் கிடப்பில் போட்டுவிட்டு, மேற்கத்திய ஜாஹிலிய்ய சட்டங்களை அமுல்படுத்தத் தொடங்கியுள்ளது.

### 2. சமய, தஃவா சுதந்திரம் முற்றாக மறுக்கப்பட்டுள்ளது.



எகிப்தின் வரலாற்றில் முதற் தடவையாக 55,000 இமாம்கள் வெள்ளிக்கிழமை குத்பாக்களில் உரையாற்ற முடியாது என இராணுவம் தடை விதித்துள்ளது. இடைக்கால சமய விவகார அமைச்சர், இமாம்கள் எகிப்தின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் எனத் தெரிவித்துள்ளார்.

எகிப்திய வரலாற்று ஆசிரியர் முஹம்மத் அல் ஜவ்வாதி, இராணுவத்தின் இத்தடைச் சட்டம் குறித்து கருத்து வெளியிட்டபோது, துருக்கியில் முஸ்தபா கமால் அதாதுர்க், கிலாபத்தைத் தீர்த்துக் கட்டி, மதச்சார்பற்ற துருக்கியை ஸ்தாபித்தது போன்றே இன்று எகிப்திலும் நிலமைகள் மாறியுள்ளன என எச்சரித்துள்ளார்.

இதேவேளை, 50,000 பள்ளிவாயல்களை மூடுவதற்கும் மத விவகார அமைச்சு முயற்சித்து வருவதாக ஜவ்வாதி குற்றம் சுமத்துகின்றார். எகிப்தில் மதச்சார்பற்றவர்களும் வெள்ளிக்கிழமை குத்பாக்களுக்கு சமூகம் தருகின்றனர். அப்படி இருக்கும் போது இராணுவம் ஏன் பள்ளிவாயல்களை மூட வேண்டும் என ஜவ்வாதி கேள்வியெழுப்பியுள்ளார்.

இதேவேளை இராணுவத்திற்கு எதிராக நடைபெற்ற புரட்சியின்போது நூற்றுக்கணக்கான பள்ளிவாயல்களை இராணுவம் தீ வைத்துக் கொழுத்தியதோடு, அவற்றின் மீது துப்பாக்கிப் பிரயோகமும் செய்தது. முஸ்லிம் அல்லாதவர்கள் ஆட்சியில் இருந்தாலும் இப்படி நிகழ மாட்டாது என ஜவ்வாதி கருத்து வெளியிட்டுள்ளார். ஜாமிஉல் அஸ்ஹரில் அதான் சொல்வதற்கும் இரா ணுவம் முதன் முறையாகத் தடை விதித்துள்ளது.



### 3. இராணுவ நீதிமன்றங்களில் பொது மக்கள் மீது விசாரணை

இராணுவப் புரட்சியை எதிர்த்து பல்வேறு மைதானங்களில் அமைதி ஆர்ப்பாட்டம் செய்த 6000 பேரை சுட்டுக் கொன்ற இராணுவம், 8000 பேரை கைதுசெய்து தடுப்புக் காவலில் வைத்துள்ளது. தற்போது இவர்கள் மீது இராணுவ நீதிமன்றத்தில் விசாரணைகள் நடத்தப்பட்டு வருகின்றன. சிவிலியன்களை இராணுவ நீதிமன் றத்தில் விசாரணை செய்வது குறித்து பாரிய எதிர்ப்புக் கிளம்பியுள்ளபோதும், இராணுவம் இந்தப் பயங்கரவாத நடவடிக்கையில் இறங்கி யுள்ளது.

1960 களிலும் 1970 களிலும் இவ்வாறுதான் பொதுமக்களும் இஸ்லாமியவாதிகளும் இராணு வத்தால் அடக்கப்பட்டனர். இதுவரை 60 வழக்குகள் இவ்வாறு விசாரிக்கப்பட்டுள்ளதாக உள்ளூர் மனித உரிமை நிறுவனங்கள் தெரிவித் துள்ளன.

52 பேர் இராணுவத்தைத் தாக்கியதாக பொய் யாகக் குற்றம் சுமத்தப்பட்டு, 25 ஆண்டு கால சிறைத் தண்டனை வழங்கப்பட்டுள்ளது. இஸ் லாமிய ஆட்சியை ஆதரிப்பவர்களும், இராணுவ ஆட்சியை எதிர்ப்பவர்களும் இவ்வாறு பொய்க் குற்றச்சாட்டு சுமத்தப்பட்டு விசாரிக்கப்பட்டு வருகின்றனர். பெருந்தொகையான இஸ்லாமிய அறிஞர்கள் தடுப்புக் காவலில் வைக்கப்பட் டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

### 4. பொருளாதாரம் சரிந்து விழுகின்றது.



விவசாய நாடான எகிப்தின் பொருளாதாரம் வெளிநாட்டு முதலீடுகள் மற்றும் உல்லாசக் கைத்தொழில் மீதே தங்கியுள்ளது. சமீபத்தில் அங்கு நடந்த கருத்துக் கணிப்பீட்டின்படி முர்ஸி பதவி கவிழ்க்கப்பட்டமைக்குப் பின்னர் நாட்டின் பொருளாதாரம் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளது என்பதை 50 வீதமான மக்கள் ஏற்றுக்கொண் டுள்ளனர்.

மொத்த தேசிய வருமானத்தில் 40 வீதமான பங்கு வகிக்கும் உல்லாசக் கைத்தொழில் சுமார் பூச்சிய நிலைக்கு வந்துள்ளது. நாட்டில் நிலவும் அவசரகாலச் சட்டமும் இராணுவ ஆட்சியுமே இதற்கான காரணம் என பொருளியல் நிபுணர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

மாலை வேளைகளில் அமுலுக்கு வரும் அவசரகாலச் சட்டம் மக்களின் சுதந்திர

நடமாட்டத்திற்கும் பொழுதுபோக்குத் துறைக்கும் பாரிய இடைஞ்சலாக மாறியுள்ளதால் வெளிநாட்டு உல்லாசப் பயணிகளின் தொகை பாரியளவு வீழ்ச்சி கண்டுள்ளது.

முக்கிய உல்லாசத் துறை பிராந்தியங்களான ஜீஸா, சினாய் என்பவற்றில் நூற்றுக்கணக்கான உல்லாசத் துறை ஹோட்டல்கள் மூடப்பட்டுள்ளன. ஸ்பெய்ன், போர்த்துக்கல், இத்தாலி, கிரேக்கம் ஆகிய நாடுகளிலிருந்து வருகை தரும் உல்லாசப் பயணிகள் எண்ணிக்கை முற்றாக வீழ்ச்சியடைந்துள்ளது. எகிப்தின் பொருளாதாரம் உலக நாடுகளின் வரிசையில் 118 ஆவது இடத்திற்கு வந்துள்ளது.

இரண்டு மாதங்களிலேயே இந்த மாற்றம் எனில், இராணுவ ஆட்சி நீடிக்கும்போது எகிப்தின் கதை என்னவாகும் என்பதே பலரது கேள்வியாக உள்ளது. அமெரிக்கா மற்றும் அறபு நாடுகள் வழங்கும் உதவித் தொகையில் ஒரு நாட்டைக் கொண்டு செல்ல முடியாது. அரச அலுவலகங்களில் பணியாற்றும் ஊழியர்களின் வருகையில் 60 வீத வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதால் சிவில் நிர்வாகமும் சீர்குலைந்து போயுள்ளது.

இந்நிலையிலிருந்து மீள்தல் மிகவும் சிக்கலான ஒன்று என அவதானிகள் எச்சரிக்கின்றனர். காரணம், ஊதியம் கொடுப்பதற்கு திறைசேரியில் பணம் இல்லாத நிலையை இராணுவ அரசாங்கம் எதிர்நோக்கியுள்ளது. எகிப்து இன்று எதிர்நோக்கியுள்ள பொருளாதாரப் பின்னடைவே இராணுவ ஆட்சிக்கு சாவு மணி அடிக்கும் என சுதந்திரத்திற்கும் நீதிக்குமான கட்சியின் பிரதித் தலைவர் கலாநிதி இஸாம் அல் இர்யான் குறிப்பிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

முர்ஸி பதவி கவிழ்க்கப்பட்ட பின்னர் கட்டார், 8 பில்லியன் உதவித் தொகையை வழங்கியது. குவைத், ஐக்கிய அறபு எமிரேட்ஸ், சவூதி அறேபியா என்பன 12 பில்லியன் வழங்கியது. எனினும், எகிப்தின் இன்றைய நெருக்கடிக்கு அது போதுமானதாக இல்லை.

### 5. இராணுவ அரசின் மீதான மக்கள் அதிருப்தி அதிகரிக்கின்றது.



நாளாந்தம் இராணுவ அரசாங்கத்தின் நகர்வு கள் மீது அதிருப்தியடையும் மக்கள் எண்ணிக்கை அதிகரிக்கின்றது. ஜூலை மாதம் தஹ்ரீரில் ஒன்று திரண்டிருந்த முர்ஸிக்கு எதிரான வர்கள் தற்போது இராணுவ ஆட்சிக்கு எதிராகவும் குரல் எழுப்பி வருகின்றனர். ஆனால், அதற்கு எந்த அர்த்தமும் கிடைக்கப் போவதில்லை.

லிபரல்வாதிகளைப் பொறுத்தவரையில் அது காலம் கடந்த ஞானமே. பராதியும் அம்ர் மூஸாவும் பேசிய ஜனநாயகம் இனி எகிப்தில் தொலைதூரக் கனவாகவே மாறப் போகின்றது.

### 6. பலஸ்தீன விடுதலைப் போராட்டத்தை அடக்குதல்:



இஸ்ரேலின் ஆக்கிரமிப்புக்கு எதிராகப் போராடி வரும் காஸாவிலுள்ள ஹமாஸ் இயக் கத்தை முற்றாக அழித்தொழிப்பதற்கு எகிப்திய இராணுவத்தை இஸ்ரேல் பயன்படுத்தத் தொடங்கியுள்ளது. கடந்த இரு மாதங்களுக்குள் இரு நாடுகளுக்கும் இடையிலான உறவு முன்பை விட நெருக்கமடைந்துள்ளது.


எதிரியின் எதிரி நண்பன் என்ற வாக்கியத்தை இஸ்ரேலும் எகிப்திய இராணுவமும் உண்மைப்படுத்துகின்றது என்கிறார் Middleast Monitor பத்தியாளர் ஷாஸியா அர்ஷாத். இப்பத்திரிகையில் இஸ்லாமிய கண்ணோட்டத்தில் எழுதும் ஒரே எழுத்தாளர் இவர் மாத்திரமே. சமீபத்தில் எகிப்திய இராணுவம் இஸ்லாமியவாதிகளைப் பதவி கவிழ்க்க உதவிய இஸ்ரேலுக்கு உத்தியோகபூர்வமாக நன்றி தெரிவித்ததை ஷாஸியா தனது கட்டு ரையில் மேற்கோள் காட்டியுள்ளார்.

இராணுவம் அதிகாரத்தைக் கைப்பற்றிய கணமே பலஸ்தீனர்களுக்கு எதிராக மேற்கொண்ட முதல் நடவடிக்கை ரபா எல்லையை மூடிவிட்டமையே. மட்டுமன்றி, எகிப்தின் கடற் படையினர் பலஸ்தீன மீனவர்களுக்கு எதிராக தாக்குதல் நடத்தியுள்ளனர். அதில் ஒருவர் கொல்லப் பட்டதோடு, ஐந்து பேர் கைதுசெய்யப்பட்டனர்.

முர்ஸியின் பதவிக் காலத்தின்போது காஸாவுக்கும் எகிப்துக்கும் இடையிலான எல்லைப் புறம் திறந்து வைக்கப்பட்டதோடு, நெருக்கடிக்கு உள்ளாகியிருக்கும் காஸா மக்கள் தமது வாழ்வாதாரங்களைத் தேடுவதற்கான சுதந்திரம் அவரால் வழங்கப்பட்டது. இது இஸ்ரேலுக்கு பெரும் தலையிடியாக இருந்தது. இராணுவம் பதவிக்கு வந்தவுடன் எல்லையை மூடியது மட்டுமன்றி, பலஸ்தீன மீனவர்களைத் தாக்கும் நடவடிக்கைகளிலும் ஈடுபட்டுள்ளது.

தமர்ருத் இயக்கம் என்ற பெயரில் காஸாவில் உள்ள ஹமாஸ் இயக்கத்திற்கு எதிராக மதச்சார்பற்ற இளைஞர்களைப் பயன்படுத்துவதற்கு இஸ்ரேலும் எகிப்தும் திட்டமிட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

## 7. இஸ்ரேலின் ஆதிக்கமும் தன்முனைப்பும் விரிவடைய வழியேற்பட்டுள்ளது



எகிப்தில் ஜனநாயக ஆட்சி கவிழ்க்கப்பட்டதன் மிக ஆபத்தான விளைவு, இஸ்ரேலின் மூர்க்கமும் இரத்த வெறியும் முன்பை விட தீவிரமடைவதே. தற்போது சமாதானப் பேச்சுவார்த்தை எனும் பெயரில் மேற்குக்கரை ஜனாதிபதி அப்பாஸுக்கும் இஸ்ரேலுக்கும் இடையில் நடைபெற்று வரும் பேச்சுவார்த்தை மிகவும் தந்திரமாகக் கையாளப்படுகின்றது. எகிப்தில் இஸ்லாமிய ஆட்சி கவிழ்க்கப்பட்ட கையோடு, சிரியாவிலும் ஈராக்கிலும் பாரிய கொந்தளிப்பு திட்டமிட்டு உருவாக்கப்பட்டுள்ள நிலையில், பலஸ்தீனர்களை ஏமாற்றும் இன்னொரு முயற்சியே புதிய பேச்சுவார்த்தை.

ஜோன் கெரி அவசர அவசரமாக ஏற்பாடு செய்த பேச்சுவார்த்தையின்போதே கிழக்கு ஜெருசலத்தில் ஆயிரக்கணக்கான புதிய யூத வீட்டுத் திட்டங்கள் அமுலுக்கு வந்துள்ளன. பிராந்தியத்தில் எந்த சமாந்திர அரசியல் வலுவாண்மையும் இல்லாத நிலையில், இஸ்ரேல் வழமையாக மேற்கொண்டு வரும் ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளுக்கு அங்கீகாரமாகவே பேச்சுவார்த்தை மேசையை நாடுகின்றது. அமெரிக்காவும் இஸ்ரேலிய நலன்களுக்காக மட்டுமே முனைந்து செயல்படுகின்றது.

எகிப்தில் இஸ்லாமியவாதிகள் களத்திலிருந்து அகற்றப்பட்டதன் பின்னர் அதன் அத்தனை இலாபங்களையும் மொத்தமாக அனுபவிக்கும் ஒரே நாடாக இஸ்ரேல் மாறி வருகின்றது. சுதந்திரத்திற்குப் பின்னர் எகிப்தில் முதன் முறையாக ஜனநாயக ரீதியில் ஓர் இஸ்லாமிய ஆட்சி மலர்ந்தது.

ஆனால், எதிரிகள் அதனை இல்லாதொழித்தனர். அங்கு பலரும் எண்ணுவது போன்று இராணுவத்திற்கும் சகோதரத்துவ அமைப்புக்கும் இடையிலான போராட்டம் நடக்கவில்லை. மாறாக இஸ்லாத்திற்கும் ஜாஹிலிய்யத்திற்கும் இடையிலான போர்க்களமே இன்றைய எகிப்து.

இராணுவத்தின் கண்மூடித்தனமான அதிகார வெறியின் கீழ் எகிப்து ஆபத்தான விளைவுகளை எதிர்நோக்கியுள்ளது. எவ்வாறாயினும், முதவல்லி அஷ்ஷஅராவி குறிப்பிடுவது போன்று சத்தியத்திற்கும் சத்தியத்திற்கும் இடையில் ஒருபோதும் போராட்டம் நிகழ்வதில்லை. அதுபோன்றே சத்தியத்திற்கும் அசத்தியத்திற்கும் இடையிலான போராட்டம் நீடிப்பதுமில்லை. ஒரு கட்டத்தில் அசத்தியம் வீழ்ந்தே தீரும்.

அந்தக் கணத்தை நாம் எதிர்பார்த்து நின்கின்றோம்.



# முர்ஸியின் வீழ்ச்சியால்

# எகிப்து இழந்தது என்ன?

**பர்ஹான் மன்ஸூர்**

அண்மையில் 'ஷரீஆவின் நோக்கங்கள்' என்ற தலைப்பில் நடந்த மாநாட்டில் தூனிஸிய நஹ்ழா இயக்கத்தின் தலைவர் ஷெய்க் ராஷித் அல்கன்னூஷியிடம், ''நீங்கள் நாட்டுக்காக என்ன செய்துள்ளீர்கள்? ஷரீஆ சாதித்தது என்ன?'' என்ற இளைஞர் ஒருவரின் ஆக்ரோஷமான கேள்விக்கு மிகவும் அமைதியாக, ''இரண்டு வருடங்களுக்கு முன் இவ்வாறு கேட்டிருக்க முடியுமா? கேட்டு விட்டு வீடு திரும்புவது சாத்தியமா?'' என ஷெய்க் அவர்கள் பதிலளித்தார்கள்.

அவ்வாறான நிலையில்தான் எகிப்தும் இருந்தது. அந்தக் கொடுமையிலிருந்துதான் எகிப்தை இஸ்லாமியவாதிகள் மீட்டெடுத்தனர். ஆனால், அதே நிலையை நோக்கி எகிப்து பயணிப்பது கவலையளிக்கிறது. வரலாற்றில் எகிப்துக்கு தனி இடம் உண்டு. கிறிஸ்துவுக்கு முன்னிருந்து எழுதப்பட்ட வரலாறு அதற்குள்ளது. எகிப்துக்கு 'உம்முத்துன்யா' (உலகின் தாய்) என்ற சிறப்புப் பெயரும் உண்டு.

கடந்த வருடம் எகிப்தின் அரசியல் மாற்றம் குறித்து சந்தோசப்பட்ட உள்ளங்களுக்கு தற்போது நடக்கின்ற நிகழ்வு ஒரு கவலையாக இருப்பினும், கவலைப்படத் தேவையில்லை. முர்ஸியின் பதவி வீழ்ந்ததே தவிர இஸ்லாம் விழவில்லை என்பதற்கு நோன்பு நோற்ற நிலையில் ராபிஆ அதவிய்யாவில் போராட்டத்தில் ஈடுபட்ட மக்களின் நம்பிக்கையே சான்றாகும்.

வரலாற்றில் இவ்வாறான சதி நடவடிக்கைகள் நிறையவே நடந்திருக்கின்றன. நயவஞ்சகர்கள் கூட்டம் நபி (ஸல்) அவர்களின் சமூகத்திலும் இருந்திருக்கிறார்கள். எதிரிகளுடன் சேர்ந்து நபி (ஸல்) ஆட்சியை வீழ்த்துவதற்கு முயற்சி செய்திருக்கிறார்கள். இதே நிலைதான் எகிப்திலும் நடந்தேறியிருக்கிறது. ஒரு சில டொலர்களுக்காகவும், ஜுனைஹ்களுக்காகவும் நாட்டை விற்றிருக்கிறார்கள்.

இஹ்வான்கள் வெறுமனே ஜனாதிபதிப் பதவியை மாத்திரம் நோக்காகக் கொள்ளவில்லை. பதவி இல்லை என்றாலும் அவர்களின் செயற்பாடு தொடரும். இருப்பினும், முர்ஸியின் வீழ்ச்சியால் எகிப்து சில விடயங்களை இழந்து விட்டது. ஜனாதிபதி முர்ஸி பதவி விலகுவதற்கு இராணுவம் காலக்கெடு விதித்தபோது ஷெய்க் கர்ளாவி அவர்கள் ''முபாரக்கின் ஆட்சியில் முப்பது வருடங்களும் அதற்கு முன் முப்பது வருடங்களும்

பொறுமையாக இருந்த உங்களுக்கு, ஏன் ஒரு வருடம் பொறுமையாக இருக்க முடியாது? அவர் பதவி விலகினால் அதன் பின் வருபவர்கள் மோசமானவர்களாக இருப்பார்கள்'' அது தற் போது நடந்திருக்கிறது.

பெரும்பான்மை மக்களின் வாக்குகளால் தெரிவு செய்யப்பட்டவர் பதவி கவிழ்க்கப்பட்டு மீண்டும் லிபரல்வாதிகளிடம் எகிப்து சென்ற டைந்திருக்கிறது. அவர்கள் அமெரிக்காவினதும் இஸ்ரேலினதும் நலன் காப்பவர்களாகவே செயற் படுவார்கள். இந்த இராணுவ சதிப் புரட்சிக்குப் பின்னால் ஜனநாயகத்தை விரும்பாத ஒரு சில அறபு நாடுகளும் திரைமறைவில் செயற்பட்டுள்ளன.

இதுவரை ஆட்சிக்கு வந்த தலைவர் களுள் அல்குர்ஆனை மனனம் செய்த ஒருவர் முர்ஸி. அந்த நூலின் அருள் (பரக்கத்) ஆட்சியாளருக்கும் எகிப்திற் கும் இருந்திருக்கும். தற்போது எகிப்து அதை இழந்து விட்டது. இஸ்லாத்திற்கு மாற்றமான கலாசாரம் திட்டமிட்டு புகுத்தப்படும். விரும்பியோ விரும் பாமலோ எதிர்கால சந்ததியினர் அதை சகித்துக் கொள்ள வேண்டியேற்படும். முபாரக்கின் காலத்தைப் போன்று இரா ணுவ அடக்குமுறை காணப்படும்.

சுதந்திரமாக எழுதவோ பேசவோ முடியாத நிலை ஏற்படும். அரசுக்கு எதிராக பேசுகின்றவர், எழுதுகின்றவர் நாளை கைது அல்லது கொலை செய்யப் படலாம். இதுவே எகிப்துக்கு இராணு வம் பெற்றுக் கொடுத்த சுதந்திரம், ஜனநாயகம். ஆகவே தனிமனித சுதந்திரத்தை விரும்புகின்ற ஒரு தலைவரை எகிப்து இழந்து விட்டது.

முர்ஸியை பதவி கவிழ்ப்பதற்காக தஹ்ரீரில் கூடிய ஒரு சிலரை தனது ஆதரவாளர்களைத் தூண்டி விட்டு தாக்கியிருக்க முடியும். மேலும் மிகப் பெரும் கலவரத்தை, சேதத்தை ஏற்படுத்தி யிருக்க முடியும். ஆனால், அவர் அவ்வாறு செய்ய வில்லை. தனது ஆதரவாளர்களை ராபிஆ அதவிய்யாவிலே கூட்டியிருந்தார். அவர்கள் அமைதி வழிப் போராட்டம் நடாத்தினார்கள். இதுவே இஸ்லாம் கூறும் ஜனநாயகம். இந்த முன்மாதிரியை முபாரக்கிடமோ லிபரல்வாதி களிடமோ காண முடியாது. தனது மக்கள், தனது மக்களின் பாதுகாப்பு, தனது மக்களின் செல்வம், தனது மக்களின் சுதந்திரம் பற்றி சிந்திக்கின்ற, கவலைப்படுகின்ற ஒரு மாமனிதரை எகிப்து இழந்திருக்கிறது.

எகிப்தின் முக்கிய சிந்தனையாளரான தாரிக் அல்பிஷ்ரி குறிப்பிடுவது போல எகிப்தில் நடப் பது இஹ்வான்களுக்கும் லிபரல்வாதிகளுக்கு மிடையிலான அரசியல் பிரச்சினையல்ல. ஜன நாயகத்திற்கும் சர்வாதிகாரத்திற்கும் இடையிலான பிரச்சினையாகும். முர்ஸியை வீழ்த்துவது இஹ் வான்களை வீழ்த்துவதல்ல. அது ஜனநாயகத்தை வீழ்த்துவதாகும்.

உண்மையில் எகிப்திய இராணுவம் மிகப் பெரிய வரலாற்றுத் தவறை செய்திருக்கிறது. அமெரிக்காவினதும் இஸ்ரேலினதும் பணத்திற்கு பலிக்கடாவாகி விட்டது. அவர்களை விடவும் பக்கத்து மத்திய கிழக்கு நாடுகளின் ஆட்சியாளர்



கள் நயவஞ்சகத் தனமாக நடந்திருக்கிறார்கள். மத்திய கிழக்கின் குழிபறிக்கும் ஆட்சியாளர் போன்றல்லாது நல்ல மனம் படைத்த ஒரு தலை வரை எகிப்து இழந்து விட்டது.

கடந்த வருடம் முபாரக் பதவி கவிழ்க்கப்பட்ட போது அவரிடம் கோடான கோடி சொத்துக்கள் இருந்தன. வெளிநாட்டில் சொந்தமாக வீடுகள் காணப்பட்டன. ஆனால் முர்ஸி அவ்வாறான ஒரு மனிதரல்ல. இறைவனைப் பயந்தவர். பொறுப் புடன் செயற்படக் கூடியவர். முபாரக்கிற்கு கொலை வழக்கு இருக்கிறது. இலஞ்ச ஊழல் வழக்கு பதிவு செய்யப்பட்டிருக்கின்றது. ஆனால் முர்ஸிக்கு அவ்வாறான வழக்குகள் கிடையாது. அவரைப் பொறுத்தவரை ஒரு வருடத்தில் நாட் டுக்கு சேவைகள் செய்யவில்லை என்ற காரணம் மாத்திரமே உள்ளது. சேவைகள் செய்யவில்லை என்பதை விட்டு செய்ய விடவில்லை என்பதே பொருத்தமான கூற்றாகும். ஆகவே மக்கள்




பணத்தைத் திருடாத பணத்தின் மீது ஆசை கொண்டிராத ஒரு நல்ல மனிதரை எகிப்து இழந்து விட்டது.

கடந்த ஒரு வருடமாக பத்திரிகைகள், இணையத்தளங்களில் முர்ஸியின் புகைப் படத்தை அதிகமாகவே காணக் கிடைத்தது. தொழுவது, திக்ர் செய்வது, ஜமாஅத் நடாத்துவது, அல்குர்ஆன் ஓதுவது, துஆ கேட்பது போன்ற புகைப்படங்களே அவற்றுள் அதிகமாக இடம்பிடித்திருந்தன. ஆனால், ஹுஸ்னி முபாரக்கின் புகைப்படமாக இருக்கலாம், லிபரல்வாதிகளின் புகைப்படமாக இருக்கலாம். அவை அமெரிக்க ஜனாதிபதிகளுடன் கைலாகு செய்வது போன்றும், இஸ்ரேல் பிரதமரை கட்டித் தழுவுவது போன்றும் நடிகைகளை முத்தமிடுவது போன்றும் பத்திரிகைகளில் காணக் கிடைத்தன. அரச அலுவலகங்களில் தனது படத்தை தொங்க விடுவதை முர்ஸி தடுத்தார். ஆகவே அல்லாஹ்வை நோக்காகக் கொண்டு வாழ்கின்ற ஒரு மனிதரை எகிப்து இழந்திருக்கிறது.

கடந்த வருடம் புரட்சி ஆரம்பித்து முர்ஸி ஆட்சிக்கு வந்ததிலிருந்து எகிப்திய நிலவரங்கள் குறித்து அதிகம் வாசிக்கக் கிடைத்தது. அல் அஸ்ஹரில் கற்கின்ற நண்பர் ஒருவரிடம் அவர் பற்றி விசாரித்ததுண்டு. முர்ஸியின் ஆடம்பர மில்லாத வாழ்வைப் பற்றி இவ்வாறு கூறினார்: ஒரு பிரதேசத்தினூடாக முபாரக் பயணித்தால் அப்பிரதேச பாதைகள் அனைத்தையும் மூடிவிடுவார்கள். அவருக்கு முன்னும் பின்னும் நூற்றுக் கணக்கான வாகனங்கள் பயணிக்கும். ஆனால், முர்ஸி எளிமையானவர். முன்னும் பின்னும் இரு பொலிஸ் வண்டிகள் மாத்திரமே செல்லும். இதுதான் முர்ஸியின் ஆடம்பரமற்ற வாழ்க்கை. அப்படிப் பட்ட ஒரு தலைவரை எகிப்து இழந்து விட்டது.

இராணுவ சதிப் புரட்சியின் மூலம் ஆட்சிக்கு வருகின்ற லிபரல்வாதிகள் ஒருபோதும் நாட்டு மக்கள் குறித்து சிந்திக்க மாட்டார்கள். அமெரிக்க இஸ்ரேலிய நலன் பற்றி சிந்திப்பவர்களாகவே அவர்கள் இருப்பார்கள். இதனை அவர்கள் ஆட்சியைக் கைப்பற்றிய மறுதினமே கண்டு கொள்ள முடிந்தது. பக்கத்து நாடான பலஸ்தீன் கஷ்டப்படும் மக்களுக்காக உணவு கொண்டு செல்வதற்காக முர்ஸியினால் திறக்கப்பட்டிருந்த கடவைகளை இராணுவம் மூடியிருக்கிறது. ஷெய்க் கர்ளாவி சொல்வதுபோன்று இராணுவ சதிப் புரட்சி மூலம் ஆட்சிக்கு வருபவர்கள் மோசமானவர்களாகவே இருப்பார்கள். கல்விக் கொள்கை மாற்றமடையும், அமெரிக்க சார்பான பொருளாதாரக் கொள்கை நாட்டில் நடைமுறைப் படுத்தப்படும்.

எகிப்தின் பெற்றோலிய வளம் அமெரிக்காவிற்கும், இஸ்ரேலிற்கும் தடையின்றி விநியோகிக்கப்படும். இவை அனைத்தும் லிபரல்வாதிகள் எகிப்தில் செய்யவிருக்கும் சாதனைகள். ஊடக சுதந்திரம் நசுக்கப்படும், அவர்களுக்கு சார்பானவர்கள் உயர் பதவிகளில் அமர்வார்கள். இலஞ்ச ஊழல் மீண்டும் தலைதூக்கும். உள்நாட்டு திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், நிறுவனங்களில் மேற்கு நாடுகளின் தலையீடுகள் அதிகரிக்கும். நாட்டை விற்று தனது வயிற்றை நிரப்புகின்றவர்களிடத்தில் எகிப்து வீழ்ந்திருக்கிறது.

நாட்டுக்காக இறை பாதையில் போராடி உயிரை தியாகம் செய்ய தயங்காத ஒரு மாமனிதரை எகிப்து இழந்து தவிக்கிறது. ஆனாலும் நாம் விரக்தியடையத் தேவையில்லை. கவலைப்பட வேண்டிய அவசியமில்லை. ஜனாதிபதி பதவி பறிபோனதே தவிர இஸ்லாம் பறிபோகவில்லை. அவர்கள் இஃவான்களை வீழ்த்த முடியும். இஸ்லாத்தை வீழ்த்த முடியாது. அனைத்திலும் நலவிருக்கிறது என்பது எமது மாநபியின் அருள்வாக்கு. நாம் தொடர்ந்து பிரார்த்திப்போம். அதுவே எமது ஆயுதம்.

# எகிப்து இராணுவப் புரட்சியும் பலஸ்தீன விவகாரமும்

ஜனநாயக ரீதியில் ஆட்சிக்கு வந்த ஜனாதி பதி முர்ஸி இராணுவ சதிப் புரட்சி மூலம் பதவி கவிழ்க்கப்பட்டமை ஒரு முக்கிய நிகழ்வாகும். இதன் அதிர்வுகள் பலஸ்தீன விவகாரத்தில் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தி இருப்பதை அவதானிக்க லாம்.

இராணுவத் தளபதி அப்துல் பத்தாஹ் ஸீஸி தலைமையிலான இராணுவப் புரட்சி பற்றிய செய்தி வெளியான அடுத்த கணமே எகிப்துக்கும் காஸாவுக்கும் இடையிலான 'ரபாஹ்' பாதை மூடப்பட்டது. எகிப்தின் எந்த விமான நிலையம் அல்லது துறைமுகம் ஊடாகவும் பலஸ்தீனர்கள் -விஸா பெற்றிருப்பினும்- வருவதோ செல்வதோ தடைசெய்யப்பட்டது. இராணுவ சதிப் புரட்சி நடைபெற்று நான்கு நாட்களுக்குள், எகிப்துக்கும் காஸாவுக்கும் இடையில் பலஸ்தீனர்கள் பயன் படுத்திய சுமார் 805 நிலத்துக்கடியிலான சுரங்கப் பாதைகள் எகிப்திய இராணுவத்தால் உடைத்து நொறுக்கப்பட்டன.

இந்த நடவடிக்கைகள் நிகழ்ந்து அடுத்த சில நாட்களில் திட்டமிட்ட அடிப்படையில் எகிப்திய ஊடகங்கள், பலஸ்தீனர்களை மிகவும் மிலேச்சத் தனமாகவும் இழிவாகவும் விமர்சனம் செய்தன. சினாய் பகுதியில் கட்டுப்பாடு சீர்குலைந்து பாது காப்புக்கு அச்சுறுத்தல் ஏற்படுவதற்கு அவர்களே மூல காரணம் என நேரடியாகக் குற்றம் சுமத்தின.

சினாய் பிரதேசத்தில் எகிப்திய இராணுவம் பாரிய அளவில் குவிக்கப்பட்டதும் இராணுவ ஹெலிகொப்டர்கள் மேலால் பறந்து வேவு பார்ப் பதற்கும். இஸ்ரேலால் எகிப்திய இராணுவத் திற்கு அனுமதி வழங்கப்பட்டது. இது போன்ற ஒரு சலுகை ஹுஸ்னி முபாரக்கின் காலத்தில் லாது எகிப்திய இராணுவத்திற்கு வழங்கப்பட்டி ருக்கவில்லை.

இராணுவப் புரட்சியாளர்கள் மேற்கொண்ட இத்தகைய அதிரடி நடவடிக்கைகள் எதிர்பார்க்கப் பட்டவையே.

அபூ அப்துல் பத்தாஹ்



ஏனெனில், வெறுமனே முர்ஸி யைப் பதவி கவிழ்க்க எகிப்து இராணுவம் மேற்கொண்ட புரட்சியல்ல இது. இப்புரட்சிக்குப் பின்னால் பாரிய, நுணுக்கமாகத் திட்டமிட்ட ஸியோனிஸ-அமெரிக்க, ஐரோப்பிய, சர்வதேச சக்திகள் செயற் பட்டன.

முஸ்லிம் உம்மத்திலும், குறிப்பாக அறபு உலகிலும் ஏற்பட்டுள்ள அறபு வசந்தத்திற்கும் பிற்பட்ட புதிய நிலையை முற்றாக மாற்றி அமைப்பதே இவற்றின் நோக்கமாகும். அறபு வசந்தம் இஸ்ரேலின் இருப்புக்கு அச்சுறுத்தலாக அமைவதை இந்த சக்திகள் அவதானித்தன.

இராணுவ சதிப் புரட்சி எகிப்தில் ஏற்பட்ட தால் நேரடியாகவும் உடனடியாகவும் பாரிய இழப்புகளையும் சவால்களையும் பலஸ்தீனர் கள் -குறிப்பாக ஹமாஸின் கீழ் உள்ள காஸா பிரதேச மக்கள்- எதிர்நோக்க வேண்டி ஏற்பட்டது. இஃவான் பின்னணி கொண்ட முர்ஸி ஆட்சியில் இருந்த பொழுது, காஸாவை ஆளும் ஹமாஸ் மிகவும் நெருக்கமான இறுக்கமான தொடர்பு களை முர்ஸியுடன் ஏற்படுத்திக் கொண்டது. அரசியல், சிந்தனா ரீதியான, ஹமாஸிற்கான பக்கபலமாக முர்ஸி விளங்கினார்.

இக்காலப் பகுதியில் ஹமாஸிற்கும் சிரிய அரசாங்கத்திற்கும் இடையிலான உறவு முறிந் தது. ஹிஸ்புல்லாஹ்வுடனான தொடர்பும் பலவீன முற்றது. எகிப்தின் இஃவானிய ஆட்சியோ உறவை ஏற்படுத்தியதால் ஈரானுக்கும் ஹமாஸிற் கும் இடையிலான உறவும் முறிந்தது. கட்டாரில் இருந்து பலஸ்தீன் தலைவர்கள் வெளியேற்றப் பட்டனர்.



இப்படியான சந்தர்ப்பத்தில் முர்ஸி பதவி கவிழ்க்கப்பட்டது ஹமாஸ் ஆட்சியைப் பொறுத் தளவில் அரசியல், பொருளாதார மற்றும் பல துறைகளிலும் பாரிய பாதிப்புகளை ஏற்படுத்தின. எகிப்தில் முபாறக்கைப் பதவி கவிழ்க்க இளைஞர் கள் முனைப்புடன் ஈடுபாடு காட்டினர். பின்னர் மேற்குலகின் பணத்தைப் பெற்ற இளைஞர்கள் தான் முர்ஸி ஆட்சியை முன்னெடுக்காத குழப் பத்தை ஏற்பத்தி இராணுவ சதிப் புரட்சிக்கு வித்திட்டனர்.

காஸாவிலும் ஹமாஸுக்கு எதிராக இளை ஞர்களைத் தூண்டி இவ்வாறான ஒரு குழப்ப நிலையை உருவாக்குவது தொடர்பில் இஸ் ரேல் நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. தாராண்மை வாத, மதசார்பற்ற சிந்தனைகளை சுமந்துள்ள இளைஞர்களை இதற்கான எரிபொருளாகப் பயன்படுத்தவும் அது திட்டமிட்டு வருகிறது.

வாழ்க்கையை -அல்குர்ஆன் குறிப்பிடுவது போல- மிகவும் நேசிக்கும் யூதர்கள், வாழ்வை விடவும் ஷஹாதாவை நேசிக்கும் இஃவானிய சக்திகளுக்கு மிகவும் அஞ்சுகின்றனர். இமாம் ஹஸன் அல்பன்னா (றஹ்) கொலை செய்யப் பட்ட வேளை அமெரிக்கா வில் யூதர்கள் தங்களது மகிழ்ச்சியை வெளிப்படுத்த பாரிய, பகிரங்க விழாவெடுத்து இதனை கொண்டாடினர்.

இந்த வகையில் இஃவானிய சிந்தனையை சுமந்த ஹமாஸ் மற்றும் முர்ஸி ஆட்சியைத்தான் இஸ்ரேலின் பாதுகாப்புக்கு மிகவும் பெரிய அச்சுறுத்தலாக ஸியோனிஸ்ட்டுகள் கருதுகின்ற னர். எகிப்தின் முர்ஸியை வீழ்த்துவதற்கு இஸ் ரேல் எகிப்திய இராணுவத்திற்கு ஆலோசனை களையும் ஆயுதங்களையும் வழங்கியது யாவரும் அறிந்ததே. முர்ஸியை வீழ்த்திய பின்னர், அடுத்து ஹமாஸை வீழ்த்த பல்வேறு நடவடிக்கைகளை யும் இஸ்ரேல், எகிப்திய இராணுவ சதிப் புரட்சி யைத் தொடர்ந்து மேற்கொண்டு வருகிறது. அந்த வகையில் பலஸ்தீன விவகாரம் தொடர்பில் கீழ்வரும் நிகழ்வுகளை எதிர்பார்க்கலாம்.

1. ரபாஹ் கடவை ஊடாக பொருட்கள் காஸாவிற்கு வருவதைக் கட்டுப்படுத்தி, இறுக்க மான பொருளாதாரத் தடையை ஏற்படுத்துவது. இதன் மூலம் காஸாவில் ஹமாஸிற்கு எதிரான பொதுசன அபிப்பிராயத்தைத் தோற்றுவிக்கலாம்.

2. ஹமாஸிற்கு எதிரான மஹ்மூத் அப்பாஸிற்கு பிராந்திய சர்வதேச அளவிலான ஆதரவைத் திரட்டவும் வலுப்படுத்தவும் எகிப்திய இராணுவ ஆட்சியாளர்களைப் பயன்படுத்தலாம்.


3. எகிப்தின் பாதுகாப்புக்கு ஹமாஸ் அச்சுறுத்தலாக அமைகிறது என்ற குற்றச்சாட்டை ஏற்படுத்தி, ஹமாஸ் தலைமைகளைக் கைதுசெய்து விசாரணைக்கு உட்படுத்தலாம்.

4. இஸ்ரேலின் தரப்பில் ஹமாஸ் மீது இராணுவ நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படலாம். அதன்போது அதனை அறபு, இஸ்லாமிய உலகில் நியாயப்படுத்த எகிப்திய இராணுவ ஆட்சியாளர்களை இஸ்ரேல் பயன்படுத்தலாம்.

மொத்தத்தில் இஸ்ரேலின் பாதுகாப்பை மையமாக வைத்தே எகிப்திய இராணுவ சதிப் புரட்சி மேற்கொள்ளப்பட்டது. அது மட்டுமன்றி, இஹ்வான்களின் தாயகமான எகிப்திலே அவர்களது ஆட்சி கவிழ்க்கப்பட்டுள்ளதால், முழு உலகிலுமுள்ள 'நடுநிலைமை'க் கொள்கைவாதிகள் ஒடுக்கப்படும் ஒரு நிலைமை -உருவாகலாம்- அல்லாஹ் நாடா திருக்கட்டும்.

எகிப்தில் நடந்த இராணுவ சதிப் புரட்சி முர்ஸிக்கோ, இஹ்வான்களுக்கோ எதிரான ஒரு புரட்சியல்ல. அது தூய இஸ்லாத்திற்கு எதிரான சதிப் புரட்சி என்பதை நமது அகீதாத் தோழர்களில் பலர் இன்னும் புரியாதிருக்கின்றனர் என்பது தான் கவலைக்குரிய விடயமாகும். அதனை சரியாகப் புரிந்தால் தான் எமது அகீதா விவகாரமான பலஸ்தீன விவகாரமும் இந்த இராணுவ சதிப் புரட்சியால் எந்தளவு பாரிய தாக்கத்தையும் சவால்களையும் எதிர்நோக்கும் என்பதைப் புரியலாம். சரியான புரிதலை அல்லாஹ் நமக்கு வழங்குவானாக!

# எகிப்துக்கு எதிராக அல் ஜஸீரா வழக்குத் தாக்கல்



எகிப்தில் களநிலவரங்களை அறிக்கைப் படுத்தி வந்த தமது செய்தியாளர்கள் மீது இராணுவ அரசாங்கம் மேற்கொண்ட தாக்குதல் நடவடிக்கைகள் மற்றும் கெடுபிடிகளுக்கு எதிராக சர்வதேச நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யவுள்ளதாக அல்ஜஸீரா ஊடக வலையமைப்பின் சட்ட ஆலோசகர்கள் குழு தெரிவித்துள்ளது.

கட்டாரை தளமாகக் கொண்ட அல்ஜஸீரா ஊடக வலையமைப்பு, ஜனாதிபதி முர்ஸி பதவி கவிழ்க்கப்பட்டதைத் தொடர்ந்து களச் செய்திகளை சேகரிக்கும் பணியில் ஈடுபட்டு வந்தது. அப்போது அதன் முன்னணி பத்திரிகையாளர்கள், நிகழ்ச்சித் தயாரிப்பாளர்கள் பலர் கைதுசெய்யப்பட்டு விசாரணை செய்யப்பட்டதோடு, தடுப்புக் காவலிலும் வைக்கப்பட்டனர்.

அல்ஜஸீராவின் செய்தி நிலையம் தாக்கப்பட்டதோடு, விலைமதிப்பற்ற ஊடகக் கருவிகள் இராணுவத்தினரால் கைப்பற்றப்பட்டன. நேரடி ஒளிபரப்புக்குத் தடைவிதிக்கப்பட்டதோடு, பல செய்தியாளர்கள் நாட்டை விட்டு வெளியேற்றப்பட்டனர்.

இராணுவ அரசாங்கத்தின் இந்நடவடிக்கைகளுக்கு எதிராகவே ஜெஸீரா ஊடக வலையமைப்பு வழக்குத் தாக்கல் செய்யவுள்ளது. எகிப்தில் ஊடக சுதந்திரம் முற்றாக விலக்கப்பட்டுள்ளதோடு, உலகத்தின் மாபெரும் பொய்யுரைக்கும் ஊடகங்களாக உள்ளூர் அரச ஊடகங்கள் மாறிவிட்டுள்ளன.

தமது அடிப்படை உரிமைகள் மீறப்பட்டுள்ளதாக குற்றம் சுமத்தியுள்ள அல்ஜஸீரா, இவ்விவகாரத்தை சர்வதேச நீதிமன்றத்திற்குக் கொண்டு வரவுள்ளதாகக் கூறியுள்ளது.

# தடைகளைத் தாண்டும் தூனீஸியா

என்.எம். முஹம்மத்

ஹுதைபியா உடன்படிக்கை இஸ்லாமிய வரலாற்றில் முக்கியமானதொரு இடத்தை பெறுகின்றது. ஒப்பந்தம் கைச்சாத்தாகும்போது 'அல்லாஹ்வுடைய தூதர் முஹம்மத்' எனும் வாசகத்தை அகற்றுமாறு காபிர்கள் வேண்டிய போது அல்லாஹ்வுடைய தூதர் அதற்கு உடன்பட்டார். பல மூத்த ஸஹாபாக்கள் உடன்படிக்கையின் உள்ளடக்கம் தொடர்பில் கவலை கொண்டனர். உமர் (ரழி) அவர்கள் அல்லாஹ்வின் தூதரைப் பார்த்து இப்படிக் கேட்டார். நாங்கள் முஸ்லிம்கள் தானே, அவர்கள் காபிர்கள் தானே, நாம் ஏன் அவர்களுக்குப் பயப்பட வேண்டும் என்று. தனது பொறுமையைத் தாண்டி பேசினார். ஆனால், நபி முஹம்மத் (ஸல்) அவர்கள் அந்த ஒப்பந்தத்தின் உள்ளடக்கத்தில் காணப்பட்ட விடயங்களின் அரசியல் உள்ளடக்கங்களை மிகச் சரியாக விளங்கியிருந்தார். 'அல்லாஹ்வுடைய தூதர் முஹம்மத்' எனும் வாசகத்தை அல்லாஹ்வுடைய தூதர் ஏற்றுக் கொண்டமை அரசியல் பாதையில் காணப்பட வேண்டிய நுணுக்கங்களையும், விட்டுக் கொடுப்புக்களையும் கோடிட்டு காட்டுகின்றது.

*தூனீஸியா அறபு வசந்தத்தின் பிறப்பிடம். அறபு வசந்தத்தின் பின்பு நடைபெற்ற முதலாவது தேர்தலில் அந்நாட்டின் பிரதான கட்சியான அந்நஹ்ழா கட்சி வெற்றிபெற்று, மதச்சார்பற்ற ஜனாதிபதி முன்ஸிப் மர்ஸூகி கட்சியுடன் கூட்ட ரசாங்கம் ஒன்றை அமைத்தது. அந்நஹ்ழா பிரதமர்*




பதவியைப் பெற்றதுடன் கட்சியின் பொதுச் செயலாளர் ஹமாதி ஜபாலி பிரதமர் பதவிக்கு நியமிக்கப்பட்டார். சக்தி வாய்ந்த இஸ்லாமிய கட்சியொன்று, அடிப்படையில் அரசியலில் மதத்தின் பிரசன்னத்தையே எதிர்க்கும் ஒரு கட்சியுடன் கூட்டுச் சேர்ந்தமை 'மனித குலத்திற்கு புதியதோர் அரசியல் கலாசாரத்தை அறிமுகப்படுத்தியது' அவர்களிடம் காணப்பட்ட முக்கிய உடன்பாடு நல்லாட்சியில் (Good Governence) உடன்பாடான விடயங்களுடன் நாட்டை கட்டியெழுப்புவதாகும். அந்நஹ்ழாவின் இந்த முடிவை அதன் தலைவர் ஷெய்க் ராஷித் அல் கன்னூஷியின் வார்த்தைகளாலேயே நாம் விளங்கிக் கொள்ளலாம்.

அந்நஹ்ழா தூனிசியாவில் ஜனநாயக மாற்றத்தையே விரும்புகின்றது. அதில் பல்வேறு கட்சிகள் அரசியலில் பங்குகொள்ள இடமிருக்கும். அரசியல் அநீதி, பொருளாதார ஏற்றத் தாழ்வுகளுக்கு எதிராக மக்கள் போராடுவதற்கு இடமிருக்கும். அரசியலிலும், பொருளாதாரத்திலும் சமூக விடயங்களிலும் பன்மைத்துவத்தை அங்கீகரிக்காத அரசுகள் நீடிக்காது என்பது எமக்கு நன்கு தெரியும்.

ஷெய்க் கன்னூஷி நீண்ட அரசியல் பாதையை கடந்து வந்த ஒரு அறிஞர். யதார்த்தத்தை யதார்த்தமாக நோக்குபவர். சமூக மாற்றக் கோட்பாட்டில் இஃவான்களின் படிமுறை மாற்றங்களை அங்கீகரிக்கின்றவர். எனவேதான் அவர் எப்போதும் தீர்மானங்களை அந்நஹ்ழாவின் சூராவிற்கு முன் வைக்கும்போது நாட்டினதும், நாட்டு மக்களினதும் நலனைக் கருத்திற் கொள்கின்றார்.

இஃவான்கள் அவரவர் நாடுகளில் நாட்டை சீர்திருத்தும் பாரிய பணியை மேற்கொண்டு வருகின்றனர். ஆனால், அதன் இறுதி இலக்கு என்ன என்பதை பல மக்கள் அறியாது இருக்கின்றனர். இமாம் ஹஸனுல் பன்னா (ரஹ்) அரசை சீர்திருத்துதல் என்பதை பின்வருமாறு விளக்குகின்றார்.

''அரசாங்கம் உண்மையான இஸ்லாமிய அரசாக காணப்பட வேண்டும். அரசு சமூகத்தின் பணியாளர் என்ற வகையில் அதன் பணியை அது நிறைவேற்றும். இஸ்லாமிய அரசு என்பது பகிரங்கமான வகையில் பாவங்களில் ஈடுபடாது. இஸ்லாத்தின் கடமைகளை நிறைவேற்றக் கூடிய முஸ்லிம்களைக் கொண்ட நிறுவனமாகும். அது இஸ்லாத்தின் போதனைகளையும் சட்டங்களையும் அமுல்படுத்தும். தேவையானபோது முஸ்லிம் அல்லாதோரிடம் உதவி பெறுவது தவறில்லை. இஸ்லாமிய அரசு பாதுகாப்பை உறுதிப்படுத்தும். சட்டத்தை அமுல்படுத்தும், கல்வியைப் பரப்பும், சக்தியை தயார்படுத்தும், ஆரோக்கியத்தை பேணும், பொது நலன்களைப் பராமரிக்கும், சொத்துக்களை அபிவிருத்தி செய்யும், செல்வத்தை பாதுகாக்கும், ஒழுக்க மாண்புகளைப் பலப்படுத்தும், தஃவாவை பரப்பும். இவை இஸ்லாமிய அரசின் சில பணிகளாகும்.



ஒரு முஸ்லிம் நாட்டில் எப்படி அரை நிர்வாணப் பெண்ணின் படம் இருக்க முடியும் என பொலிஸில் சென்று முறைப்பாடு செய்து அதனை அகற்றினார். அவர் 'முஸ்லிம் நாடு' என்பதன் கருத்தை ஆழமாக விளக்கியிருந்தார்.

1928 ஆம் ஆண்டு இன்று எல்லா சர்வதேச ஊடகங்களிலும் பேசுபொருளாக மாறியுள்ள முஸ்லிம் சகோதரத்துவ இயக்கத்தை (அல்இஃவானுல் முஸ்லிமூன்) இயக்கத்தை ஆரம்பிக்கும் போது, எவ்வாறு அப்துல் காதிர் ஜீலானி (ரஹ்) முஸ்லிம் சமூகத்தை மீள புனரமைப்பதற்கு முஸ்லிம் தனிமனிதர்களின் உருவாக்கம் முக்கியமானதெனக் கருதினாரோ அதே போன்று, முஸ்லிம் உம்மத்தை தற்காலத்திலும் மீட்டெடுப்பதற்கு முஸ்லிம் தனிமனிதனின் உருவாக்கம் மிகவும் அத்தியாவசியமானது எனக் கருதினார். அவர் வாழ்ந்த சூழலில் காணப்பட்ட சாதுலியா தரீக்காவின் தாக்கம் அவரது பணியை இலகுபடுத்தியது. அல்லாஹ்வை நாடிய (றப்பானிகளை) உருவாக்குவதே வெற்றியின் அடிப்படை எனக் கருதினார்.

இமாம் பன்னா (ரஹ்) தனது தஃவாவின் அடிப்படைகளை பின்வரும் அடிப்படைகளில் முன் வைத்தார்.

01. முஸ்லிம் தனிமனிதர்கள் உருவாக்கம்

02. முஸ்லிம் குடும்பங்களை உருவாக்குவது



03. முஸ்லிம் சமூகத்தை உருவாக்குவது

04. அந்நிய ஆதிக்கத்தில் இருந்து முஸ்லிம் நாடுகளை விடுவிப்பது

05. முஸ்லிம் நாட்டு அரசுகளை சீர்திருத்துவது

06. இஸ்லாமிய கிலாபத்தை உருவாக்குவது

07. இஸ்லாமிய சிந்தனை உலகாளும் சிந்தனை யாக மாற்றுதல்

இமாம் ஹஸனுல் பன்னா (ரஹ் அவர்கள் இந்தப் பணியை ஆறு பேருடனே ஆரம்பித்தார்.

கடந்த ஆண்டில் நடைபெற்ற இடதுசாரி தலை வர் ஒருவர் மீதான படுகொலை தூனீஸியாவில் பரந்துபட்ட சந்தேகங்களைக் கிளரிவிட்டது. நாட்டைக் குழப்ப வேண்டும் என்ற தெளிவான நோக்கத் துடன் பிரான்சினால் திட்டமிட்டு செய்யப்பட்ட ஒரு படுகொலை என பலர் நேரடி யாக பிரான்சை குற்றஞ்சாட்டினர்.

ஷெய்க் ராஷித் அல்கன்னூஷி இப்படுகொலை தொடர்பாக கருத்து தெரிவிக்கும்போது அறபு வசந்தம் நடைபெற்ற நாடுகளில் அரசியல் ஸ்திரத் தன்மையை ஏற்படுத்துவதற்கான திட்டமிடல்கள் வெளிநாட்டு தளமொன்றில் நடைபெறுகின்றது. எல்லாத் திட்டங்களும் கச்சிதமாக நிறைவேற்றப் படுகின்றன. ஆனால், அந்நஹ்ழா இத்தடை களைத் தாண்டி உரிய இலக்கை அடையும் எனக் குறிப்பிட்டுள்ளார்.

அமெரிக்கா ஆபிரிக்காவிற்கான தனியான படைப் பிரிவொன்றை நிறுவியுள்ளது. பல நாடு களில் அமெரிக்காவின் சிறிய படைப் பிரிவுகள் ஊடுருவியுள்ளது. பிரான்ஸ் உள்நாட்டு அமைச்ச ரின் அதிரடியான நிலைப்பாடு இப்படுகொலை யின் பின்னால் பிரான்ஸின் கரம் இருப்பதாக பல தூனீஸிய ஆய்வாளர்கள் குறிப்பிட்டுள்ளனர். அறபு வசந்தத்தின் பின்னால் அறபு நாடுகளிலும், முஸ்லிம் நாடுகளிலும் ஏற்பட்டுள்ள இஸ்லாமிய வசந்தத்தை அடக்கியாள்வதற்கு பல திட்டங்கள் நுணுக்கமாக நடைமுறைப்படுத்தப்பட்டுக் கொண்டிருக்கின்றது. இதுதான் நாம் எகிப்தில் துவங்கி வங்காள தேசம் வரை நீள்கின்றது.

தூனிஸியாவின் உள்நாட்டு அமைச்சு சுக்ரி பிளைய்ட் இன் கொலையுடன் நான்கு பேரைக் கைது செய்துள்ளது. அவர்களில் சிலர் கடும் போக்கு ஸலபி பிரிவைச் சேர்ந்தவர்கள் எனவும், அல்ஜீரிய பின்னணியைக் கொண்டவர்கள் என் றும் அறியக் கிடைத்துள்ளது. அல்ஜீரியா பிரான் சின் பின்புலத்துடன் செயற்படும் அரசு என்பது கூர்ந்து நோக்கத்தக்கது. ஆரம்ப விசாரணைகள் தொடர்பாக அந்நஹ்ழா பின்வரும் அறிக்கையை வெளியிட்டுள்ளது.

இத்தாக்குதலை நாம் வன்மையாகக் கண்டிக் கின்றோம். இத்தாக்குதல் எதிர்கட்சித் தலைவரை கொலை செய்ததுடன் தூனீஸியாவின் அமைதி யான சிவில் வாழ்வையும் குழப்பியுள்ளது.

எமது நாட்டின் உளவுப் பிரிவையும் நீதித் துறையையும் நாம் பாராட்டுகின்றோம். மிக அவசரமாக குற்றவாளிகளை கண்டுபிடித்தமை பல பிரச்சினைகளைத் தீர்த்துள்ளது.

இந்தக் கொலையுடன் தொடர்புபட்டவர்களை தண்டிப்பதுடன் இதனை பின் நின்று திட்ட மிட்டவர்களும் தண்டிக்கப்பட வேண்டும். மிகச் சுருக்கமான இந்த அறிக்கை பலமான அரசியல் நகர்வுகளை எதிர்வு கூறியுள்ளது.

ஹமாதி ஜபாலி பதவி விலகியதன் பின்பு உள்நாட்டு அமைச்சர் அலி லராயிட் புதிய பிரதம ராக நியமிக்கப்பட்டுள்ளது பல முக்கிய அமைச் சுப் பதவிகளை விட்டுக் கொடுத்து, ஐந்து கட்சி கள் கொண்ட கூட்டணியாக அரசை மாற்றி இருப் பது ஷெய்க் கன்னூஷியின் தூர நோக்கையும், அரசியலை அரசியலாலேயே கையாளும் உயர் தந்திரோபாயத்தையும் காட்டுகின்றது. அவரது நுணுக்கமான நகர்வு. அரசியலில் ஏனைய நாடு களிற்கு இது சிறந்த முன்னுதாரணமாகும்.

இந்த இடத்தில் ஷெய்க் கன்னூஷியின் பின் வரும் கருத்து நோக்கத்தக்கது. தஃவாவின் நலன் கள் அரசியல் நலன்களோடு முரண்படுகின்ற போது தஃவாவின் சமூக நலன்களுக்கே முன்னு ரிமை அளிக்க வேண்டும். அரசியல் ரீதியாக அடைந்ததை விடவும் சமூக ரீதியாக அடையப் பெற்றவையே சிறந்ததாகவும் அதிகம் நிலைத் திருக்கக் கூடியதாகவும் உள்ளது என்பது நிரூபிக் கப்பட்டுள்ளது. அரசியல் ரீதியாக அடையப் பெற்றவை வேகமானதாக இருந்த போதிலும் குறுகிய ஆயுள் கொண்டவை.

இஸ்லாமிய இயக்கம் அரசாங்கத்தை அதன் முதலாவது முன்னுரிமைக்குரிய விடயமாக இருக்கக் கூடாது. அரசாங்கத்தை கைப்பற்றுவது மிகப் பெரிய அடைவாக இருக்க முடியாது. மக்கள் இஸ்லாத்தையும் அதன் தலைவர்களையும் விரும்புவதே அதை விட மிகப் பெரியதாக இருக்கும்.

உண்மையில் தஃவாவின் நலனை முன்னிருத்தும் அந்நஹ்ழா ஆட்சியை விட்டுக் கொடுத்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. பாதை நீண்டது, கட்டங்களைக் கொண்டது. இதனை சில தீவிர வாதிகள் விளங்கிக் கொள்ளாமல் விடல். ஆனால், இஸ்லாத்தை அழகாக விளங்க வைப்பது ஒரு தாஈயின் முக்கிய பணியாகும்.

இமாம் ஹஸனுல் பன்னா (ரஹ்) இப்படிக் கூறுகின்றார்:

தஃவா உலகின் பல பாகங்களில் பரவுவதன் மூலம் இடம்பெறும். இஸ்லாத்தை விட்டு திசை திருப்பக்கூடிய குழப்பங்கள் நீங்கி அல்லாஹ்விற்கே முழுமையான கட்டுப்பாடு ஏற்படும் வரை தொடர வேண்டும். 'அல்லாஹ் தனது ஒளியைப் பூரணப்படுத்துவதைத் தவிர ஏனையவற்றை மறுக்கின்றான்.'

அல்லாஹ் தனது விடயத்தை மிகைப்போனாக இருக்கின்றான். ஆனாலும் அதிகமான மனிதர்கள் அறியாதவர்களாக இருக்கின்றனர். (அல்குர்ஆன்)

# ஒஸ்லோ ஒப்பந்தம் 20 ஆண்டுகளுக்குப் பின்




1993 செப்டம்பரில் இஸ்ரேலியப் பிரதமர் இற்சாக் ரெபினுக்கும் பலஸ்தீன விடுதலை அமைப்பின் தலைவர் யாஸிர் அறபாத்திற்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட ஒஸ்லோ ஒப்பந்தத்திற்கு 20 ஆண்டுகள் ஆகிவிட்டன. உத்தியோகபூர்வமாக இஸ்ரேலுக்கும் அதன் ஆக்கிரமிப்புக் கொள்கைகளுக்கும் அங்கீகாரம் வழங்கிய முதற் பெரும் ஒப்பந்தம் இது எனக் கருதப்படுகிறது.

பில் கிளின்டனின் மத்தியஸ்தத்துடன் நடைபெற்ற இவ் ஒப்பந்தத்தின்படி 21,000 சதுர கி.மீ. பரப்பைக் கொண்ட பலஸ்தீனில் 1400 சதுர கி.மீ. பரப்பே பலஸ்தீனர்களுக்கு உரியது என ஒப்புக் கொள்ளப்பட்டது. அவ்வொப்பந்தத்தில் பலஸ்தீனர்கள் சார்பாக அறபாத் கைச்சாத்திட்டார்.

இவ்வொப்பந்தத்தின்படி காஸாவிலிருந்து யூதக் குடியேற்றங்கள் முற்றாக வெளியேற்றப்பட வேண்டும். மேற்குக்கரையிலிருந்தும் யூதக் குடியேற்றங்கள் முழுமையாக வெளியேற்றப்பட வேண்டும். 2000 இன் ஆரம்பத்தில் இரு நாடுகள் உருவாக்கப்பட வேண்டும் என்றெல்லாம் ஒப்புக் கொள்ளப்பட்டன.

ஆனால், 364 சதுர கி.மீ. பரப்பைக் கொண்ட காஸாவிலிருந்து மட்டுமே யூதக் குடியேற்றங்கள் வெளியேற்றப்பட்டன. மேற்குக்கரையிலிருந்து யூதர்கள் வெளியேற்றப்படவில்லை என்பது மட்டுமல்ல, கடந்த 20 ஆண்டுகளில் யூதர்களின் எண்ணிக்கை அங்கு பன்மடங்காக பெருக் கப்பட்டது.

இஸ்ரேலின் கீழே அடிமைப்பட்டிருக்கும் மிகக் குறைந்த நிலப்பரப்பைக் கொண்ட காஸாவிலும் மேற்குக்கரையிலும் பலஸ்தீனர்களை அங்கீகரிக்கலாம் என்பதே இவ்வொப்பந்தத்தின் சாரம்சமாகும். அதில் அறபாத் கைச்சாத்திட்டதன் மூலம் ஒட்டுமொத்த பலஸ்தீனர்களையும் இஸ்ரேலுக்கு அவர் காட்டிக் கொடுத்தார்.



(நவீன இஸ்லாமிய சிந்தனையாளர்களில் ஷெய்க் றாஷித் அல்கன்னூஷி மிகவும் மதிக்கப்படும் ஒருவர். வெறுமனே ஒரு சிந்தனையாளராக மாத்திரமல்லாது ஒரு அரசியல் போராளியாகவும் செயற்படுபவர். 80 களிலேயே இஸ்லாமிய அரசியல் செயற் தளத்தில் முன்னின்று உழைத்தவர். பின்னர் மதச்சார்பற்ற அரசின் கெடுபிடிகள் காரணமாக சொந்த நாடான தூனிஸியாவை துறந்து மேற்குலகில் சென்று வாழ்ந்தார். அறபு வசந்தத்தின் பின்னர் நாடு திரும்பிய அவர் இன்றைய தூனிஸியாவை முன்கொண்டு செல்வதில் மிகுந்த அக்கறை கொண்டு செயற்படுகிறார்.

இஸ்லாமிய உலகில் சிறந்த நடைமுறை அரசியல் முன்மாதிரியாகக் கொள்ளப்படுகின்ற துருக்கிய மாதிரியின் சிந்தனைப் பின்புலத்தில் கன்னூஷியின் கருத்துக்களும் அதிக தாக்கம் செலுத்துவதை அவதானிக்கலாம். இங்கு கன்னூஷி அண்மையில் பேசியவற்றின் சில பகுதிகளை மொழிபெயர்த்திருக்கிறேன்.)

# தூனிசியாவின் ஜனநாயக நிலைமாற்றம் முழுப் பிராந்தியத்துக்கும் முக்கியமானது:

## - ஷெய்க் றாஷித் அல்கன்னூஷி

இஸ்லாம் மற்றும் ஜனநாயகக் கற்கைகளுக்கான ஒன்றியம் ஒரு சர்வதேச மாநாட்டை ஒழுங்கு செய்திருந்தது. இதில் உலகெங்கிலும் இருந்து அரசியல்வாதிகள், சிந்தனையாளர்கள் மற்றும் அறிஞர்கள் கலந்து கொண்டிருந்தனர். இந்த மாநாட்டில், தூனிஸியாவின் நஹ்ழா இயக்கத்தின் தலைவரும் நன்கறிந்த இஸ்லாமிய சிந்தனையாளருமான றாஷித் அல்கன்னூஷியும் கலந்து கொண்டு உரையாற்றினார்.

அவர் தனது உரையில், பிராந்தியத்தில் ஜனநாயக நகர்வின் வெற்றியின் முக்கியத்துவமும் இந்த அனுபவம் எதிர்கொள்ளும் -பொருளாதார, சமூக, பாதுகாப்பு- சவால்களும், யாப்பு, எதிர்வரும் தேர்தல்கள், புரட்சியின் குறிக்கோள்களை அடைந்து கொள்வதற்காக முன்னெடுக்கப்பட்ட நடவடிக்கைகள், பெரும்பான்மை ஆசனங்களைக் கொண்டிருக்கின்ற கட்சி என்ற வகையில், மேற்குறித்த நடவடிக்கைகளில் நஹ்ழாவின் பங்களிப்பு ஆகியவை குறித்துப் பேசியுள்ளார்.

அப்துல் பாகி கலீபா | தமிழில்: அஷ்கர் தஸ்லீம்



### ஜனநாயக நிலைமாற்றம்

ஜனநாயக நிலைமாற்றம் மற்றும் அது எதிர் கொள்ளும் சவால்கள் பற்றிப் பேசிய றாஷித் அல்கன்னூஷி பின்வருமாறு தெரிவித்துள்ளார்:

தூனியாவின் ஜனநாயக நிலைமாற்றம் முழுப் பிராந்தியத்துக்கும் முக்கியமானது. ஏனெனில், பிராந்தியத்தில் -ஏக நேரத்தில்- ஒரு ஜனநாயக, முஸ்லிம் நாட்டில் நிறுவப்படும் முதலாவது ஜனநாயக நிலைமாற்றமாக இது கருதப்படுகிறது. நாம் இந்தப் பொறுப்பின் சுமையை உணர்கி றோம். இந்த அனுபவத்தின் வெற்றிக்காவும் இந்த அனுபவம் ஏனையோரின் விடயங்களில் தலை யிடாது என்பதன் பால் கவனத்தை ஈர்க்கவும் நாம் எமது முயற்சிகளை செலவிடுகிறோம்.

மதச்சார்பற்ற கட்சிகளுடன் ஜனநாயகக் கூட்டணி அமைத்து ஆட்சி செய்வதாக நாம் தேர் தலுக்கு முன்னமே குறிப்பிட்டோம். தேர்தலின் பின்னர், அரசியல் சக்திகளை இணைத்துக் கொண்டு முடியுமானளவு விசாலமானதொரு கூட்டணியை அமைத்தோம். நிலைமாறும் கட்ட மொன்றில் எளிய பெரும்பான்மை அல்லாது விசாலமான கூட்டணிதான் அவசியம் என்பதுவே எமது கருத்து.

### அனைத்து தூனிஸியர்களுக்குமான யாப்பு

யாப்பு குறித்து பேசிய றாஷித் அல்கன்னூஷி பின்வருமாறு தெரிவித்துள்ளார்:

யாப்பு பெரும்பான்மைக்குரியதாக மட்டுமல் லாது விதிவிலக்கின்றி முழு தூனிஸியர்களுக்கு மாக அமைய வேண்டும் என்பதுவே யாப்பு வரையும்போது நாம் பின்பற்றிய கோட்பாடு. தாம் சிறுபான்மையாக இருந்தபோதும் பெரும்பான் மையாக இருந்தபோதும் தம்மையும் இந்த யாப்பு பிரதிநிதித்துவம் செய்கின்றது என்ற உணர்வு அனைத்து தூனிஸயர்களிடமும் வர வேண்டும் என்பதில் நாம் கவனமாக இருந்தோம்.

இந்த நிலையை ஏற்படுத்துவதற்காக, பல் வேறுபட்ட அரசியல் கட்சிகளுடனும் சிவில் சமூக நிறுவனங்களுடனும் பரந்தளவில் பல்வேறு பட்ட கலந்துரையாடல்களை மேற்கொண்டோம். இந்த அணுகுமுறையினூடாக யாப்பு குறித்த பெரியளவிலானதொரு உடன்பாட்டை எட்ட நாம் முயற்சித்தோம்.

இருப்பினும், ஷரீஆ, பாராளுமன்ற ஆட்சி முறையா அல்லது ஜனாதிபதி ஆட்சி முறையா?, கருத்து சுதந்திரம், மனித உரிமைகள் குறித்து மிகவும் கடுமையான முரண்பாடுகள் தோன்றி யது. அப்போது, ஒரு உடன்பாட்டுக்கு வரும் நோக்கில் பிரதான கட்சிகளுக்கிடையிலான தேசிய கலந்துரையாடலொன்றை நாம் ஏற்பாடு செய்தோம்.

ஐந்து வாரமளவு தொடர்ந்த இந்தக் கலந்துரை யாடலின் இறுதியில் நாம் ஒரு உடன்பாட்டுக்கு வந்தோம். இந்த வகையில்தான் ஷரீஆ என்ற சொல்லை யாப்பில் சேர்ப்பதில்லை என்ற விட யத்தை நஹ்ழா கட்சி ஏற்றுக் கொண்டது. ஏனெ னில், இந்த சிந்தனை தூனிஸிய மக்களிடம் தெளிவானதாக இருக்கவில்லை. அது சமூகத்தை பிரித்து விடும் நிலையில் இருந்தது.

### சவால்களும் அபிலாசைகளும்

சமூக பொருளாதார சவால்கள் குறித்துப் பேசிய றாஷித் அல்கன்னூஷி பின்வருமாறு தெரிவித்தார்:

புரட்சி உருவானமைக்கான பிரதான காரணங்க ளில் இவையும் சிலது என்பதை நாம் அனை வரும் அறிந்து வைத்துள்ளோம். மக்களது அபி லாஷைகளோ அதிகம். ஆனால், அவர்களது பொறுமை மிகவும் குறைவு.

ஐரோப்பாவிலுள்ள எமது பிரதான வியாபார பங்காளிகளின் பொருளாதார நிலை எமது ஏற்று மதிகள் மீது எதிர்மறைத் தாக்கம் செலுத்துகின்றது. இந்தத் தாக்கத்தை சுற்றுலாத் துறையிலும் நாம் அவதானிக்கிறோம். இருப்பினும் கடந்த வருடம் (2012) நாட்டின் பொருளாதார வளர்ச்சி அதி கரித்திருக்கின்றது. அத்தோடு, நாட்டுக்கு வரும் உல்லாசப் பயணிகளின் எண்ணிக்கையும் அதிக ரித்திருக்கின்றது. சென்ற வருடம் 6 மில்லியன் உல்லாசப் பயணிகள் வருகை தந்துள்ளனர்.

என்றாலும், சிடிபூஅஸிஸிலும் கஸ்ரீனிலும் புரட்சியை உருவாக்கிய இளைஞர்களின் வாழ் வில் முன்னேற்றங்கள் தென்படுவதாக இல்லை. இந்த நிலையை மாற்றியமைக்க இன்னும் சில வருடங்கள் தேவைப்படுகின்றது.

# 2013 பலஸ்தீன்-இஸ்ரேலியப் பேச்சுவார்த்தைகள்

## பலஸ்தீனை விற்கும் சர்வதேச பெருச்சாளிகளின் மாநாடு

ஸகிபவுஸ் (நளீமி)

முழு உலகமுமே எகிப்தில் இடம்பெறும் சர்வதிகாரத்திற்கு எதிரான மக்கள் போராட்டத்தைக் கூர்ந்து அவதானித்துக் கொண்டிருக்கும் சந்தர்ப்பம் பார்த்து, அமெரிக்கா நரித்தனமாக பலஸ்தீனைச் சூறையாடும் பேச்சுவார்த்தையில் மீண்டும் இறங்கியுள்ளது.


ஜோன் கெரியின் தலைமையில் இஸ்ரேலின் டுபேஸ் லிவினிக்கும்-பலஸ்தீன் செயற்பாட்டாளர் சாஈத் ஹிர்கத்திற்கும் மத்தியில் வொஷிங்டனிலும், குத்ஸிலும் மாறி மாறி பரஸ்பர கருத்துப் பரிமாறல்கள் நடைபெற்ற வண்ணமுள்ளன.

கடந்த இரு தசாப்த காலமாக இடம்பெற்ற பேச்சுவார்த்தைகளில் யஸீர் அரபாத் மற்றும் மஃமூத் அப்பாஸ் போன்றவர்கள் பலஸ்தீனில் வாழும் குடிகளுக்கோ அல்லது பலஸ்தீனின் அகதிகளுக்கோ எவ்வித நலனையும் கொண்டு வரவில்லை. பலஸ்தீன மக்கள் பெற்றிருந்த சொற்ப சுதந்திரத்தையும் ஒரு சில டொலர்களுக்கு விற்றுத் தீர்த்தனைத் தவிர.

கடந்த காலங்களில் நடைபெற்ற பேச்சுவார்த்தைகளை நோக்கும்போது, ஒவ்வொரு முறையும் பேச்சுவார்த்தைகளின் விளைவாக பல நிலங்களை பலஸ்தீன மக்கள் இழந்தார்கள். பலஸ்தீனின் எதிர்ப்புப் போராட்ட இயக்கங்களில் வேகம் முடக்கப்பட்டது. அதனை அவர்கள் மேற்கொள்வதன் சட்டபூர்வத் தன்மை பற்றி சர்வதேசத்தால் கேள்வி எழுப்பட்டன.

இம்முறை நடைபெறும் பேச்சுவார்த்தைகளை கூர்ந்து நோக்கும்போது, பலஸ்தீன் மக்களுக்கு இருக்கும் அற்ப சொற்ப அபிலாஷைகளையும் சர்வதேசத்திடம் தாரை வார்க்கும் ஒரு செயற்பாடாகத்தான் இருக்கப் போகிறது என்பதே தற்போதைக்கு தென்படும் அறிகுறி.

பலஸ்தீன்-இஸ்ரேல் சமாதானப் பேச்சுவார்த்தை என்ற போர்வையில் அமெரிக்காவும்,



மஃமூத் அப்பாஸ் தலைமையிலான பதாஹ் அமைப்பும் பல்வேறு இரகசிய எஜன்டாக்களை அடைய முற்படுவது பட்டவர்த்தனமானது.

சுருக்கமாகச் சொன்னால், பலஸ்தீனை அழிப்பதே அனைத்து சாராரினதும் இறுதி இலக்கு. இதனை ஒரு மேற்கத்திய ஆய்வாளன் குறிப்பிடும்போது, ''பலஸ்தீனப் பேச்சுவார்த்தைகள் எப்போது நிறைவுபெறும் என்றால், பலஸ்தீன் பூமி என இஸ்ரேல் சிலவற்றை வரைந்து கொடுக்கும். ஆனால் அங்கே வாழ்வதற்கு பலஸ்தீனர்கள் யாரும் இருக்க மாட்டார்கள். அந்த நாள் எப்போது வருமோ! அப்போதுதான் பலஸ்தீனப் பேச்சுவார்த்தைகள் முற்றுப் பெறும்'' என்கிறார்.

எனவே இப்படிப்பட்ட போலிப் பேச்சுவார்த்தைகளினூடாக பல இலக்குகளை பதாஹ் அடைய முற்படுகிறது. அமெரிக்காவும், இஸ்ரேலும் வேறு சில இலக்குகளை அடைய முற்படுகின்றன.

பலஸ்தீனப் பேச்சுவார்த்தைகளில் பங்கு கொள்ளும் தரப்பினர்களது இரகசிய நிகழ்ச்சி நிரல்கள் பற்றி பலஸ்தீன இராஜதந்திரி கலாநிதி முனீர் ஷபீக் ஓர் ஆழமான கருத்தை முன்வைக்கிறார். அதாவது, அண்மைக் காலமாக அமெரிக்காவின் சர்வதேச அரசியல் செல்வாக்கு மங்கி வருகின்றது. குறிப்பாக, ஒபாமாவின் இரண்டு ஆட்சிக் காலங்களிலும் சர்வதேச அளவில் தனது வல்லரசு பதவிக்கான சான்றுகளை மிகக் குறைவாகவே அமெரிக்கா காண்பித்தது.

மறுபுறத்தில் தனது போட்டியாளர்களான சீனா மற்றும் ரஷ்யா என்பன சிரியப் பிரச்சினை உட்பட, வேறு பல சர்வதேச அரசியல் தளங்களில் முனைப்போடு செயற்படுகின்றன. இத்தகைய நிலை அமெரிக்காவின் ஆதிக்கத்தை உலகில் நிலைநாட்டுவதில் ஒபாமவின் செயற்திட்டங்கள் பற்றிய பாரிய கேள்விகளை அமெரிக்கக் காங்கிரஸில் எழுப்பியுள்ளது.

எனவேதான், அமெரிக்கா முன்னர் சர்வதேச அரசியலில் வகித்து வந்த நரித்தனமாக வகிபாகத்தை மீண்டும் மீட்டிப் பெற வேண்டும் என்பதே ஒபாமாவால் தற்போதைய வெளியுறவுச் செயலாளர் ஜோன் கெரியிடம் ஒப்படைக்கப்பட்ட பணி. சிரிய விவகாரத்தில் நாட்டின் மகிமையை உயர்த்தலாம் என ஜோன் கெரி தருணம் தேடினார். ஆனால், அமெரிக்காவின் பலவீனமான செல்வாக்கினால் ரஷ்யாவிடம் சரணடைய வேண்டியேற்பட்டது.

தன்னிடம் ஒப்படைக்கப்பட்ட திட்டத்தினை சாத்தியப்படுத்துவதற்கு கெரியின் கண்ணில் பட்ட அடுத்த பொம்மைதான் பலஸ்தீனின் தலைவர் மஃமூத் அப்பாஸ். இதனால்தான் தற்போது ''பலஸ்தீன்-இஸ்ரேல் பேச்சுவார்த்தை'' என்றாவது சர்வதேச அரசியலில் மீண்டும் பொலிஸ் காரனாகக் குதிப்பதற்கு கெரி முயற்சிக்கிறார். அமெரிக்காவைப் பொறுத்தவரை பலஸ்தீனப் பேச்சுவார்த்தை என்பது வெறும் இராஜதந்திர நாடகம் என்கிறார் முனீர் ஷபீக்.

இன்னொரு கோணத்தில் இப்பேச்சுவார்த்தைகளின் பின்புலத்தை அவதானித்தால், பலனில்லாத, விளைவைத் தராத பலஸ்தீனுடனான பேச்சுவார்த்தைகளை இஸ்ரேலும் தனது சுயநல அரசியல் இலக்குகளை சாதித்துக் கொள்வதற்காகப் பயன்படுத்திக் கொள்கிறது என்பது தெளிவாகிறது.

இஸ்ரேலைப் பொறுத்தவரை, தனது சட்ட விரோத மேற்குக்கரைக் குடியேற்றங்களை சர்வதேசத்தின் கண்களுக்குப் படாமல் நிறைவுசெய்து கொள்வதும், தனது நாட்டின் சட்டபூர்வத் தன்மையை அதிகரித்துக் கொள்வதுமே தற்போதைய பேச்சுவார்த்தைகளின் பிரதான நோக்கமாகும். ஏனென்றால், பலஸ்தீனத்துடன் பேச்சுவார்த்தைகளில் ஈடுபடாமல் இருக்கும்பட்சத்தில், சர்வதேசத்தின் அழுத்தங்களைப் பலமாகவே சந்திக்க வேண்டிய நிலை இஸ்ரேலிய அரசுக்கு ஏற்படும். இதனை சமாளிப்பதற்காக ஏதோ ஒரு வகையில் சம்பிரதாயத்திற்காவது பேச்சுவார்த்தைகளில் பங்கேற்க வேண்டும்.

இதனோடிணைந்த வகையில், இத்தகைய பேச்சுவார்த்தைகளில் இஸ்ரேல் பங்கேற்பதினூடாக, தான் ஒரு சமாதானப் புறா என ஆதாரம் காட்டி, தனது ஆக்கிரமிப்பு வேலைகளில் ஈடுபடுவதற்கும் சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொள்ள முடியும். பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்ட நிலையில் ஆக்கிரமிப்பைத் தொடரும்போது, குறைந்தளவுக்கு சர்வதேச அழுத்தத்தின் வீச்செல்லையின் பரப்பை கட்டுப்படுத்துதற்கு முடியும். அல்லது சர்வதேசத்தின் அழுத்தத்தை திசை திருப்புவதற்கு முடியும்.

இந்த வகையில் பேச்சுவார்த்தைகளின் வரலாற்றை சற்று பின்னோக்கிப் பார்த்தால், ஒவ்வொரு பேச்சுவார்த்தையும் பலஸ்தீனைப் பொறுத்தவரை தோல்வியாக அமைந்தாலும், இஸ்ரேலைப் பொறுத்தவரை ஏதோ ஒரு நலனை பெற்றுக் கொடுத்த நிலையிலேயே நிறைவு பெற்று வந்துள்ளன. இதனை இஸ்ரேல் நன்றாகவே புரிந்து வைத்துள்ளது. இதுதான் எதிர்பார்க்கப்பட்ட விளைவைத் தராத பேச்சுவார்த்தை என தெரிந்த நிலையிலும் இஸ்ரேலிய அரசு பேச்சுவார்த்தைக்கு சம்மதிப்பதற்கான காரணம்.



2013 ஆம் ஆண்டு ஜூனில் அமெரிக்காவின் வெளிவிவகார செயலாளர் ஜோன் கெரியின் முயற்சியில் ஆரம்பிக்கப்பட்டுள்ள பேச்சுவார்த்தைகளில் இஸ்ரேல் நேரடியாகப் பெற்றுக் கொள்ளும் பயன்பாடு என்னவென்றால், தனது சட்டவிரோத மேற்குக்கரை குடியேற்றங்களை தொடரும் அங்கீகாரம் கிடைத்திருப்பதாகும்.

ஏற்கனவே, மஃமூத் அப்பாஸ் தலைமையிலான பலஸ்தீன அரசுக்கும்-இஸ்ரேலுக்கும் மத்தியிலான பேச்சுவார்த்தைகள் நிறுத்தப்பட்டு 3 வருடங்கள் ஆகின்றன. மீண்டும் பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்பட வேண்டுமாக இருந்தால் சில நிபந்தனைகள் நிறைவேற்றப்பட வேண்டும் என அப்பாஸ் கூறி வந்தார். அவற்றில், பலஸ்தீனக் கைதிகளை விடுதலை செய்வது. இரண்டாது குத்ஸின் மேற்குப் பகுதியை பலஸ்தீனின் தலைநகராக அங்கீகரிக்க ஒப்புக்கொள்வது, 1967 ஆம் ஆண்டு பலஸ்தீன நிலவரைபடத்திற்கு ஏற்ப பலஸ்தீனின் எல்லைகளைப் பிரிப்பதற்கு ஒப்புக் கொள்வது, பலஸ்தீனின் மேற்குக் கரைப்பகுதியில் அதிகரித்து வரும் குடியேற்றங்களை நிறுத்துவது என்பன குறிப்பிடத்தக்கவை.

ஆச்சிரியம் என்னவென்றால், மேற்கூறப்பட்ட எந்த நிபந்தனைகளும் நிறைவேற்றப்படாத நிலையிலேயே மீண்டும் அப்பாஸ் பேச்சுவார்த்தைக்கு தலையசைத்திருப்பதாகும். வெறுமனே ஒரு சில கைதிகளை இஸ்ரேல் விடுதலை செய்வதற்கு ஒப்புக் கொண்டது அவ்வளவுதான்! குத்ஸ் பற்றிய நிபந்தனையோ, அல்லது இஸ்ரேலின் சட்டவிரோத குடியேற்றங்கள் பற்றிய நிபந்தனையோ இஸ்ரேலால் கணக்கில் எடுக்கப்படவுமில்லை.

வெறுமனே சில சிறைக் கைதிகளை விடுதலை செய்ததற்காகப் பேச்சுவார்த்தைக்கு தலையசைத்திருக்கிறது பதாஹ் தலைமையிலான பலஸ்தீன அதிகார சபை. அப்பாஸ் இங்கு பலஸ்தீனின் பல இலட்சக் கணக்கான அகதிகளின் நிலைபற்றி எந்தக் கவலையும் கொள்ளமால், பலஸ்தீனுக்காகப் போராடிக் கொண்டிருக்கும் இயக்கங்கள் பற்றிய எந்தக் கரிசனையும் கொள்ளாமல், சொந்த வீட்டுப் பிரச்சினை போன்று பேச்சுவார்த்தைகளில் குதித்திருப்பது கோமாளித்தனமானது. மாத்திமன்றி, எந்தளவுக்கு இஸ்ரேலின் பாதுகாவலனாக மதச்சார்பற்ற போலி தேசியவாதி அப்பாஸ் இருக்கிறார் என்பதும் தெட்டத் தெளிவாகப் புரிகிறது.

ஏன் எவ்வித உணர்வுமில்லாமல் மஹ்மூத் அப்பாஸ் பலஸ்தீனை பட்டவர்த்தனமாக இஸ்ரேலிடம் தாரைவார்க்கும் பேச்சுவார்த்தைகளில் ஈடுபடுகிறார்? என்பது விடைகாண வேண்டிய இன்னொரு மிக முக்கியமான விடயமாகும். அதற்கான பிரதான காரணம், மஹ்மூத் அப்பாஸும் அவருடைய அமைப்பான பதாஹ்வும், பலஸ்தீன் பூமியில் வாழும் பலஸ்தீனர்களுக்கு மத்தியிலும் வெளிநாடுகளில் வாழும் பலஸ்தீன டயஸ்போராக்களுக்கு மத்தியிலும் எவ்வித அர்த்தமும் இல்லாத ஓர் அமைப்பு.

மேலும், பலஸ்தீனுக்காக சர்வதேச அரங்கில் பரிந்து பேசும் எவ்வித தகுதியும் இல்லாத அமைப்பு என்ற கருத்துக்கள் பரவலாக உலா வருகிறது. மறுபுறத்தில், பலஸ்தீனில் இயங்கும் எந்த இஸ்லாமிய அமைப்புக்களும் அப்பாஸை யோ, பதாஹ்வையோ ஏற்றுக் கொள்ளவும் இல்லை. எனவே, தனது சட்டபூர்வத் தன்மையை பாதுகாத்துக் கொள்வதற்காகவும், மேற்கூறப்பட்ட கருத்தைப் பலமாக உடைப்பதற்காகவுமே பதாஹ் சர்வதேச பேச்சுவார்த்தைகளில் ஈடுபடுகிறது. அல்லது இத்தகைய உலகளாவிய எதிர்ப்பலைகளுக்கு மத்தியில் பலஸ்தீனின் ஏகப் பிரதிநிதியாக காண்பிப்பதற்காக பேச்சுவார்த்தைகளை நோக்கி சர்வதேசம் தனக்கு சார்பான பதாஹ்வையும், அப்பாஸையும் தூண்டுகிறது.

மேலும், அமெரிக்காவும் இஸ்ரேலும் பதாஹ் அமைப்புக்கும் பலஸ்தீன அதிகார சபைக்கும் வருடா வருடம் பாரியளவான உதவித் தொகையை அளித்து வருகின்றன. இந்தத் தொகைதான் மேற்குக்கரையில் அதிகாரம் செலுத்தும் பதாஹ்வின் உயிர் நாடி. இதனை இழுந்தால் நிருவாகச் செலவுக்கு செலவளிப்பதற்காகவது பணம் இல்லாமல் போகும் நிலை ஏற்படும். இந்தக் கடன் தொகையை தொடர்ந்தும் தக்க வைத்துக் கொள்ள வேண்டும் என்பதும் மேற்கின் தாளத்துக்கு பதாஹ் ஆடுவதற்கான பிரதான இன்னொரு காரணமாகும்.

மேற்கூறப்பட்ட எல்லா அம்சங்களையும் சுருக்கித் தொகுத்து நோக்கும்போது, பதாஹ்வும் அப்பாஸும் சர்வதேசத்தின் அதிகாரப் பசிக்கு தீனி போடும் சிப்பந்தியாக செயலாற்றும் செயற்பாடுகளையே பேச்சுவார்த்தைகளில் பங்கேற்பதினூடாக செய்து வருகின்றமை புலப்படுகிறது.

# சிரியாவின் நெருக்கடிக்கு ரஷ்யாவின் மாற்றுத் தீர்வு



இரசாயன குண்டுத் தாக்குதலில் ஈடுபட்ட தாகக் குற்றம் சாட்டப்பட்டுள்ள சிரியா மீது இராணுவத் தாக்குதல் நடத்தப்பட வேண்டும் என ஒபாமா ஒற்றைக் காலில் நிற்கின்றார். அடுத்த பக்கமாக இந்த இராணுவ நடவடிக் கையை நிறுத்துவதற்கான தீவிர பிரயத்தனங் களில் இறங்கியுள்ள ரஷ்யா மாற்றுத் தீர்வுத் திட்டமொன்றை முன்மொழிந்துள்ளது.

சிரியாவிலுள்ள இரசாயன ஆயுதங்களை சர்வ தேச கட்டுப்பாட்டிலும் கண்காணிப்பிலும் கொண்டு வருவதே ரஷ்யாவின் மாற்றுத் தீர்வாகும். அமெரிக்காவுக்கு இது குறித்த தனது திட்டத்தை ரஷ்யா முன்வைத்துள்ளது. ராஜதந்திர ரீதியில் இத்திட்டத்திற்கு இணங்கியுள்ள அமெரிக்கா, இராணுவ நடவடிக்கையை தள்ளிப் போட்டுள்ளது.

சிரிய அரசாங்கமும் ரஷ்யாவின் தீர்வை வர வேற்றுள்ளது. பாதுகாப்புச் சபையில் சிரியா வுக்கு எதிரான தீர்மானத்தை நிறைவேற்றுவதில் அவசர அவசரமாக செயற்பட்ட அமெரிக்க அணுகுமுறையில் தற்போது தாமதம் தென்படுவதாக அவதானிகள் கூறுகின்றனர்.

பாதுகாப்புச் சபையின் நிரந்தர உறுப்பு நாடுகளான ஐக்கிய அமெரிக்கா, ஐக்கிய இராச்சியம், பிரான்ஸ், சீனா, ரஷ்யா என்பன கலந்துகொண்ட கூட்டத்திலும் ரஷ்யா தனது ஆலோசனையை முன்வைத்துள்ளது.

இதற்கிடையில் சிரிய அரச படையினருக் கும் கிளர்ச்சியாளர்களுக்கும் இடையிலான மோதல் கூர்மையடைந்துள்ளது. சிரியாவின் மலோலா நகரை கிளர்ச்சியாளர்கள் முழுக் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்துள்ளனர். அந்நுஸ்ரா முன்னணி அங்கு மலோலா நகரை தனது கட்டுப்பாட்டின் கீழ் வைத்துள்ளது.

ஐ.நா. சபை நிபுணர்கள் கடந்த வாரம் வெளி யிட்ட அறிக்கையில் சித்திரவதை, பாலியல் வல்லுறவு என்பன பரந்தளவில் நடைபெற்று வருவதை சுட்டிக்காட்டியுள்ளது. சிரியாவில் இடம்பெறும் மனித இனத்திற்கு எதிரான போர்க் குற்றங்கள் நிறுத்தப்பட வேண்டும் என பான் கீ மூன் வலியுறுத்தியுள்ளார்.

இவ்வாறு சிரியாவில் கிளர்ச்சியாளர்களுக்கும் அரச படைக்கும் இடையில் மீண்டும் கடும் மோதல்கள் வெடித்துள்ள நிலையில், மனிதாபி மான நெருக்கடிகள் தீவிரமடைந்து வருகின்றன.

சிரியாவிலுள்ள இரசாயன ஆயுதங்களுக்கு அஞ்சி வரும் இஸ்ரேல், இவ்வாயுதங்கள்

களையப்பட வேண்டும் என அமெரிக்காவை அழுத்தி வருகின்றது. தவறும்பட்சத்தில் ரஷ்ய ஆலோசனைத் திட்டத்திற்கு மாற்றமாக தாம் சிரியாவுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க வேண்டி வரும் என நெடன் யாஹு எச்சரித்துள்ளார்.

பிரான்ஸ், ஐக்கிய அமெரிக்கா ஆகியன சிரியா மீது இராணுவ நடவடிக்கை மேற்கொள்வதில் ஒருமித்த கருத்தைக் கொண்டுள்ளன. நிரந்தர உறுப்பு நாடுகளில் இடம்பெறும் சீனாவும் ரஷ்யாவும் சிரியாவுக்கு ஆதரவான நிலைப்பாட்டைக் கொண்டுள்ளன. ஐக்கிய இராச்சியம் சிரியாவுக்கு எதிரான இராணுவ நடவடிக்கை குறித்து பாராளுமன்றத்தில் நடத்திய வாக்கெடுப்பில் தோல்வி கண்டுள்ளதால், அமெரிக்க நிலைப்பாட்டை ஆதரித்தாலும் அதன் இராணுவ நடவடிக்கைகளுக்குத் துணைபோக முடியாத நிலையில் உள்ளது.



சிரியா மீதான இராணுவ நடவடிக்கை ரஷ்யாவை பொருளாதார ரீதியில் பாதிக்கும் என அந்நாடு அஞ்சுகின்றது. ஏனெனில், ரஷ்யா சிரியாவில் பெருமளவு முதலீடு செய்துள்ள தோடு, பிராந்தியத்தில் தனக்குரிய ஒரே நட்பு நாடாக சிரியாவையே அது கருதுகிறது.

அறப் லீக் மற்றும் வளைகுடா ஒப்பந்த சபை என்பன சிரியா மீதான இராணுவ நடவடிக்கைக்கு மறைமுகமாக ஆதரவு தெரிவித்துள்ளன. கட்டார், குவைத், சவூதி அறேபியா என்பன ஏற்கனவே எமக்கு ஆதரவளிக்கும் பட்டியலில் உள்ளது என்று ஜோன் கெரி தெரிவித்துள்ளார்.

சிரியா முதன் முறையாக தன்னிடம் இரசாயன ஆயுதம் உள்ளதை ஏற்றுக் கொண்டுள்ளமை முக்கிய விடயமாகும். ரஷ்யாவின் மாற்றுத் திட்டத்தை ஆதரித்த சிரியா, தன்னிடம் இரசாயன ஆயுதங்கள் உள்ளதை ஒப்புக் கொண்டுள்ளது. இது பஷ்ஷார் அல் அஸதின் அரசாங்கத்தை மிகச் சிக்கலான சங்கடத்தில் தள்ளியுள்ளது.

இரசாயன ஆயுதங்களைத் தாம் பயன்படுத்தவில்லை என்று கூறி வரும் சிரியா, இரசாயன ஆயுதங்கள் தம்மிடமுள்ளதை ஒப்புக் கொண்டிருப்பது சிரியாவின் வெளிப்படைத் தன்மையில் பெருத்த சந்தேகத்தை உருவாக்கியுள்ளது. அது வொஷிங்டன் நிர்வாகத்திற்கு சாதகமாக மாறியுள்ளது.

எவ்வாறாயினும், சிரியாவில் இரசாயன ஆயுதங்கள் இருக்கும் நிலையில், சுன்னி கிளர்ச்சியாளர்களின் கட்டுப்பாட்டில் அந்நாடு வருவதானது எதிர்கால இஸ்ரேலின் நலன் களுக்குப் பாதகமாக அமையும் என அமெ ரிக்காவும் இஸ்ரேலும் கருதுகின்றன. அக்கருதுகோளின் பின்னணியிலேயே சிரியா மீது இராணுவ நடவடிக்கை மேற் கொள்ளவும் இரசாயன ஆயுதங்களைக் கைப்பற்றவும் முயற்சிக்கின்றன.

ஆனால், இவ்விரு நாடுகளினதும் அதிகார வெறியும் ஆக்கிரமிப்பு மனோநிலையும் மிகவும் ஆபத்தானது. ஏனெனில், இதற்கு மிகப் பெரும் விலை கொடுக்க வேண்டியவர்கள் சிரியாவின் மக்கள் மாத்திரமல்ல. பிராந்தியத்திலுள்ள பல நாடுகளும் இதன் பாதிப்பை அனுபவிக்க நேரிடும்.

எவ்வாறாயினும், சிரியாவின் மீதான இராணுவ நடவடிக்கை கண்டிப்பாகத் தவிர்க்கப்பட வேண்டும். அதற்குப் புறம்பாக ஆட்சியிலுள்ள பஷ்ஷார் அல் அஸதை நீக்கி ஜனநாயகத் தேர்தல் மூலம் புதிய ஜனநாயக அரசை நிறுவுவதே நெருக்கடிக்கான தீர்வாகும். இதைத்தான் ஐ.நா.விடமிருந்து உலகம் எதிர்பார்க்கின்றது.



OAD
ORCHID
ALUMINIUM DISTRIBUTORS
Manufactures of Aluminium,Stainless Steel Hotel,Kitchen Equipments
30 வருட அனுபவம்
எமது பள்ளிவாயல்கள், மத்ரஸாக்கள், ஹோட்டல் மற்றும் நோன்பு காலங்களில் பள்ளிவாசல்களுக்குத் தேவையான உறுதியான முறையில் தயாரிக்கப்பட்ட சகல அளவுகளிலுமான
அலுமினியம் சட்டி (பானை)களை 4 கொத்து முதல் 80 கொத்து வரை எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம். (சமையலறைக்குத் தேவையான அனைத்து உபகரணங்களும் எம்மிடம் உண்டு)
பழைய பானைகளைத் திருத்தி கொள்ளலாம்.
அல்லது அவற்றுக்குப் பதிலாக
புதிய பானைகளைப் பெற்றுக் கொள்ளலாம்,
50 – 80 கொத்து பானைகளுக்கு
20 வருட உத்தரவாதம் உண்டு
நாட்டின் எப்பாகத்திற்கும்
விநியோக வசதி உண்டு!
NO:11, Weda Mawatha,
Wattalpola, Henamulla,
Panaduara.
Phone : 038 4924195
Fax : 038 4924470
Mob : 0777 322896
Hotline : 077 3211074




Registered as a Newspaper in GPO - QD/98/NEWS/2013